விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 258 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 17 ஞாயிற்றுக்கிழமை (03.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### நாட்டில் வறட்சியால்
## வட மாகாணம் உட்பட 20 மாவட்டங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் வறட்சியான கால நிலையால் வட மாகாணம் உட்பட 20 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தென் மேற்கு பகுதிகளில் தற்போது கடும் மழை பெய்து வருகின்ற போதிலும் கிழக்கு, வடக்கு, வடமேற்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் வறண்ட காலநிலையே காணப்படுவதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

279,892 பேர் 19

## இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்கப்படும்
### இலங்கைக்கான ஐ.நா பிரதிநிதி

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரே ஃப்ராங்க் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவை அலரி மாளிகையில் சந்தித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டதாக பிரதமரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. 19

# இந்து – பௌத்த மோதல் ஏற்படலாம்



### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை

(அம்பாறை)

**நாட்டில் இந்து – பௌத்த மோதல் ஏற்படக்கூடிய அச்சநிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சிங்கள மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

வெள்ளவத்தை, தெஹிவளை மற்றும் தென் மாகாணங்களில் 19

### சுதுமலையில் 4 கிளைமோர் குண்டுகள் மீட்பு



19

### பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் மகன் களத்தில்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்கவை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு 19

### இன முறுகல் ஏற்படும் என தெரிவித்து
## திருமலை விகாரைக்கு எதிரான போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை

(திருகோணமலை)

இன முறுகலை ஏற்படுத்தும் எனத் தெரிவித்து திருகோணமலை விகாரைக்கு எதிரான போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருகோணமலை இலுப்பைக்குளம்பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், போராட்டத்தில் ஈடுபடுவதற்கு 14 பேருக்கு தடை விதித்து நீதிமன்றம் 19

## 77 வகை மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது 77 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசர கொள்வனவின் கீழ் 400 வகையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு, வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டங்களின் கீழ் பெறப் 19

### வானில் வந்த கும்பலால்
## பழக்கடை வியாபாரி கல்வியங்காட்டில் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர், வான் ஒன்றில் வந்த கும்பலால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக, நேற்று உறவினர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து வான் ஒன்றில் யாழ்ப்பாணம் வந்த 12 பேர் அடங்கிய கும்பலே வியா 19

## தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாட எதிர்பார்ப்பு
### டலஸ் அணியினர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளுடன் எதிர்வரும் நாட்களில் கலந்துரையாடலை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமைத்துவம் வகிக்கும் சுதந்திர மக்கள் சபை தெரிவித்துள்ளது.

அதன் பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன இந்த விடயத்தை 02

### சிறுமியின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுமியொருவருக்கு மணிக்கட்டுடன் கையொன்று சத்திர சிகிச்சை மூலம் நேற்று அகற்றப்பட்டுள்ளது.

காய்ச்சல் காரண 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய கடற்படைக்கு சொந்தமான INS Delhi எனும் யுத்த கப்பல் நேற்று முன்தினம் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த கப்பல் 163 மீட்டர் நீளமுடையது. (ம-7)

### உலகின் சிறந்த வங்கி ஆளுநராக

# மத்திய வங்கியின் ஆளுநர் தரப்படுத்தப்பட்டார்

உலகின்மிகச்சிறந்த மத்திய வங்கிஆளுநர்கள் 21 பேரில் ஒருவராக. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Global Finance சஞ்சிகையினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய அவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு முதல் Global Finance சஞ்சிகையினால் மேற்கொள்ளப்படும் இந்த சர்வதேச தரப்படுத்தலில் 101 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பணவீக்க கட்டுப்பாடு, பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்தல், நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வட்டி வீத முகாமைத்து வம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு. A முதல் F வரையிலான மட்டங்களில் இந்த தரப்படுத்தல் மேற்கொ ள்ளப்படுகின்றது.

இதற்கமைய. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க A மட்டத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த தரப்படுத்தலின்போது. இலங்கையுடன் கொலம்பியா. டொமினிக்கன் குடியரசு. ஐஸ்லாந்து. இந்தோனேஷியா. மொராக்கோ மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் முன்னணியில் காணப்படுகின்றன.

குறித்த தரப்படுத்தலில் இந் திய மத்திய வங்கியின் ஆளுநர் ஷக்திகாந்தா தாஸ் முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாம் இடத்தை சுவிட்ஸர்லாந்தின் Thomas J Jordan. மூன்றாம் இடத்தை வியட்நா மின் Nguyen Thi Hong ஆகியோர் பிடித்துள்ளனர். (ம-7)

# ஆளுநர் அலுவலகத்தின் கணக்காளராக கலைச்செல்வன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் கணக்காளராக எ.கலைச்செல்வன் நியமிக்கப்பட்டுள்ளார்.

செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இவருக்கான நியமனத்தை வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் வழங்கியுள்ளார். (ம)

# தனியாரிடம் இருந்து மின்சாரம் கொள்வனவு

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

தனியாரிடம் இருந்து மின்சாரம் வாங்குவதை முன்னிட்டு ஏ.எஸ். அம்பிலிபிட்டிய மின் உற்பத்தி நிலையம் நேற்று தென் மாகாணத்துடன் இணைக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் பல அனல் மின் நிலையங்களின் அலகு விலையை விட தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் ஒரு யூனிட் மின்சாரம் குறைவாக இருப்பதாக அமைச்சர் கூறினார்.

மேலும் இரண்டு தனியார் மின்சார விநியோக நிறுவனங்களான ஏ.எஸ். மாத்தறை மின் நிலையத்திலிருந்து ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 55 ரூபாயும், ஏ.எஸ். அம்பிலிபிட்டிய அனல் மின் நிலையத்தில் இருந்து 54 ரூபாவிற்கு மின்சார அலகு கொள்வனவு செய்யப்படுவதாக தெரிவித்த அமைச்சர், மின்சார சபைக்கு சொந்தமான களனி திஸ்ஸ அனல்மின் நிலையத்தில் மின்சார அலகு ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 143 ரூபா செலவாகும் எனவும் குறிப்பிட்டார். (ம-7.9)

## தமிழ்...

குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய நாட்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நிலவும் நெருக்கடியான நிலையை அடுத்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தேர்தல் நடத்தப்படுமா? இல்லையா? என்ற நிச்சயமற்ற நிலை உள்ளது. மாகாண சபை தேர்தலுக்கு என்ன நடந்தது என அனைவரும் அறிவார்கள்.

இந்தநிலையில். எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களிலும் அவ்வாறான நிலை ஏற்பட்டால் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதேவேளை. பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள. புதிய கூட்டணிக்கு தலைமை தாங்கும் பொறுப்பு அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் அதிகாரம் உட்பட சகல பொறுப்புக்களையும் பாராளுமன்ற உறுப்பினர் யாப்பாவிடம் ஒப்படைக்கும் யோசனை, பாராளுமன்ற உறுப்பினர் லன்சா மற்றும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் முன்வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

**Romania வேலைவாய்ப்பு விசா**

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

Hybrid International hub (pvt) Ltd, Jaffna
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7177)
021 222 1265,076 250 0098

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16902)

தொடர்புகளுக்கு:- குரு
076 755 8606,
077 874 3204, 077 288 0152

**மலிவு விற்பனை**

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7178)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 30 - 65
(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்புகளுக்கு
076 097 3121

**நாகபூஷணி திருமண சேவை**

MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA
கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7182)
264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306

**வேலையாட்கள் தேவை**

யாழில் இயங்கி வருகின்ற பிரபல நகைக்கடைக்கு விற்பனை பிரதிநிதி மற்றும் கணக்காளர் தேவை.
(இருபாலாரும்) (16929)
தொடர்புக்கு :
077 882 8638

**இலவச Taxi Meter**

நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு Pickme Taxi Meter இல் இணைக்க அழைக்கவும்.
(முச்சக்கர வண்டி / CAR / VAN / மோட்டார் சைக்கிள்) (16927)
077 473 7737

**விற்பனைக்கு உண்டு**

சணல் கிடாய்கள் ஜோடியாக விற்பனைக்குண்டு.
விலை 150,000/=
தேங்காய் தொகையாக விற்பனைக்கு உண்டு.
கிலோ – 80 ரூபாய் (16928)
076 223 3096

**வாடகைக்கு தேவை**

யாழ் நகர் பகுதியில் விசாலமான கடை நீண்டகால வாடகைக்குத் தேவை. (16922)
077 749 5494

**வேலையாட்கள் தேவை**

யாழில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு பெண் ஊழியர்கள் தேவை.
சம்பளம் : 18,000 - 25,000
அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (16912)
076 832 3682

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் பாவித்த ஓடுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. (16919)
077 923 1945

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்காக

# நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்தது இந்தியா

(கொழும்பு)

**இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை இந்திய அரசாங்கம் அதிகரித்துள்ளது.**

இதனடிப்படையில், இந்திய - இலங்கை உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தி திட்டம் என்ற கட்டமைப்பின் கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 9 திட்டங்களுக்குமான இறுதி ஒதுக்கீடானது 50 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய உயர்ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பினைத் தொடர்ந்து குறித்த 9 திட்டங்களுக்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடானது 3 பில்லியன் இலங்கை ரூபாவினை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் வரையிலான சகல துறைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் சுட்டிக்காட்டியுள்ளது. (4)

## மசகு எண்ணெயின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருகிறது.

டபிள்யூ.ரி.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 85.55 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன் பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 88.55 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

எனினும் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை வீழ்ச்சியை பதிவு செய்து 2.76 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (4)

## கோழி இறைச்சி இறக்குமதி; நாளை விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

கோழி இறைச்சி இறக்குமதி தொடர்பில் வர்த்தகர்களுடனான இறுதிக் கலந்துரையாடல் நாளை 4 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்வது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கோழி இறைச்சி கிலோ ஒன்றினை 850 ரூபாவிற்கு நுகர்வோருக்கு வழங்க முடியுமெனவும் வர்த்தகர்கள் குறித்த சலுகையினை மக்களுக்கு வழங்குவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கோழிப் பண்ணை மற்றும் முட்டை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட தொகையினை மீளாய்வு செய்யுமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர சுகாதார மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனிடையே, கோழி இறைச்சி கிலோ ஒன்றினை 1,250 ரூபாவிற்கு நேற்று முதல் விற்பனை செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

கோழி மற்றும் முட்டை உற்பத்தியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

## நாட்டின் ஏற்றுமதி வருமானம் இவ் ஆண்டு அமோகம்

(கொழும்பு)

கடந்த 5 வருடங்களை விட இந்த வருடம் 86பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

முக்கியமாக இலவங்கப்பட்டை, மிளகு மற்றும் கிராம்பு போன்றவற்றின் ஏற்றுமதி மூலமே இந்தத் தொகை ஈட்டப்பட்டதாக அதன் அபிவிருத்திப் பணிப்பாளர் உபுல் ரணவீர குறிப்பிடுகின்றார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "கடந்த 5 வருடங்களைக் கருத்தில் கொண்டு, 2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பயிர்களின் ஏற்றுமதி மூலம் அதிக அந்நியச் செலாவணியை ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஈட்டியுள்ளது.

அதன்படி, ஜூன் 2023 வரை 34,771 மெட்ரிக் தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, சம்பாதிக்க முடிந்தது. அதன் பெறுமதி 86 பில்லியன் ரூபா ஆகும்." என்றார். அதேவேளை, இலவங்கப்பட்டை, கிராம்பு மற்றும் மிளகு போன்ற பயிர்கள் பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் பேரீச்சம் பழம் ஏற்றுமதியின் மூலம் பெருமளவிலான அந்நியச் செலாவணி கிடைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலிப கிண்ண தொடர்

# இளவாலை யங்கென்றிஸ், பலாலி விண்மீன் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றன





வாலிப கிண்ண தொடரில் இளவாலை யங்கென்றிஸ் அணியை எதிர்த்து நவாலி சென் பீற்றர்ஸ் அணி மோதியது. ஆரம்பத்தில் இருந்து விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் அபாரமாக 2 கோலின் மூலம் யங்கென்றிஸ் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் போட்டியை தம்வசப்படுத்திய யங்கென்றிஸ் மேலும் 1 கோல் போட முடிவில் யங்கென்றிஸ் அணி 03:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

யங்கென்றிஸ் அணி சார்பாக பிரசாத், ஞானரூபன், யூட்சுமன் தலா ஒவ்வொரு கோலினை போட்டனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கென்றிஸ் அணியின் வீரர் யூட்சுமன் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த போட்டியாக பலாலி விண்மீன் அணியை எதிர்த்து துணைவி சென் நியூ ஸ்டார் அணி மோதியது. ஆரம்பத்தில் இருந்து விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் முதல் கோலை நியூ ஸ்ரார் அணி பெற ஆட்டம் சூடு பிடித்தது. பின்னர் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து விண்மீன் அசத்த முதல் பாதியாட்டம் 2:1 என்ற நிலையில் நிலையில் முடிவுற்றது. இரண்டாவது பாதியாட்டதில் விண்மீன் முன்கள வீரர் ஜோன் விஜித் ஹெட்றிக் கோலுடன் கெத்து காட்ட போட்டி 6:1 ஆனது பதிலுக்கு மேலும் 1 கோலை நியூ ஸ்ரார் அணி போட முடிவில் பலாலி விண்மீன் அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.


விண்மீன் அணிசார்பாக ஜோன் விஜித் 4 கோல்களையும் உதயதாஸ் றெனோஜன் தலா ஒவ்வொரு கோலினை போட்டனர்.

நியூ ஸ்டார் அணிசார்பாக பிரபாஸ்கரன் 2 கோல்களை போட்டார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக விண்மீன் அணியின் வீரர் ஜோன் விஜித் தெரிவு செய்யப்பட்டார். (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2904

பவித்திரன்




காந்தன்





கிருபா




டெஸ்மியா




ஜானகி




சுரேன்




ங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கை முழுமையாக அபகரிக்க இந்தியா முயற்சி

## விமல், கம்மன்பில சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கை விவகாரத்தில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா செயற்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எந்த நாட்டவர்களும் வந்து போகலாம். இலங்கை அரசின் அனுமதியுடன் எந்த நாட்டுக் கப்பலும் இங்கு வந்து தரித்து நிற்கலாம்.

இலங்கைக்கு எந்த நாடும் உதவிகளை வழங்கலாம். இந்தியா மாத்திரம்தான் இலங்கையின் தோழன் அல்ல.

இலங்கை மீது இந்தியாவுக்கு எவ்வளவு அக்கறை உண்டோ அதேயளவு அக்கறை சீனாவுக்கும் உண்டு.

ஏனெனில் சீனாவும் இலங்கைக்கு அவசர நிலைமைகளின்போது உதவி வழங்கும் பிரதான நாடாகும்.

இலங்கையைத் தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வந்து வடக்கு, கிழக்கை முழுமையாக அபகரிக்கவே இந்தியா விரும்புகின்றது. இதற்கு நாம் ஒரு போதும் அனுமதி வழங்கமாட்டோம் என்றார். (4)




## நலங்கள் நல்கும் கந்தனே

அல்ல லுற்ற போது வந்து
அருள் புரிந்த வேலனே
நல்லை நகர் நாடு வோர்க்கு
நலங்கள் நல்கும் கந்தனே
வெல்லும் வடிவே லுடைய குற
வள்ளி மண வாளனே
சொல்லச் சொல்ல இனிக்கும் நாமம்
கொண்ட தமிழ்த் தலைவனே

விஜயகண்ணன்,
யாழ்ப்பாணம்.

## நல்லைத் தலம் செல்வோம்!

வாட்டமுற்று வருந்துகின்ற என் நெஞ்சே!
வா! நல்லைத் திருத்தலம் சென்றிடுவோம்!
அடியார் கூட்டத்தில்
குறவள்ளி தெய்வானை சூழக்
குமரனவன் எழுந்தருள வருகின்றான்!
ஆட்டத்தை நடத்துபவன் அடிபணிந்து
ஆனந்தக் கூத்தையங்கு ஆடிடுவாய்!
கேட்பதெல்லாம் அவன் தருவான்!
குறை தீர்ந்து கொண்டிடுவாய்
அமைதிதனை நிறைவாக!

ப.மகேந்திரதாசன்,
நாயன்மார்கட்டு.

# இலங்கை வரவுள்ளார் ஜப்பான் பிரதமர்

(கொழும்பு)

ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடா அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக இராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதுடில்லியில் நடைபெறவுள்ள ஜி 20 ஆவது அரச தலைவர் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா வரும் ஜப்பான்



பிரதமர் இலங்கைக்கும் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் முக்கிய அபிவிருத்தி உதவி பங்காளிகளில் ஒருவரான ஜப்பானியத் தலைவர், ஜனாதிபதி தலைமையிலான அரச அதிகாரிகளுடன் நாட்டின் கடன் மறுசீரமைப்பு மற்றும் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாட வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (4)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்ப (V) 1979 கார்த்திகை 4 கணனியியல், கலாநிதி குறுகியகால விவாகரத்து பெற்ற மணமகனுக்கு பொருத்தமான மணப்பெண் எதிர்பார்க்கப்படுகிறார்.

**077 784 0262** (c-2106)

# இராசிபலன்

**03.09.2023**
**ஆவணி 17, ஞாயிற்றுக்கிழமை**
**சதுர்த்தசி பின்னிரவு 12.03 மணிவரை**
**ரேவதி பிற்பகல் 4.29 மணிவரை**

**சுபநேரம் -9.05-10.35 மணிவரை**
**இராகுகாலம்-4.35-6.05 மணிவரை**
**சந்திராஷ்டமம்-**
**பூரம், உத்தரம்**

**சங்கடஹர கணபதி விரதம்.**

**வளவன்**




ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம் பெறலாம், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




தொலைதூரத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், மனநிறைவு கூடும் நாள், தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தந்தை வழி உறவில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காலையில் நடைபெறவிருந்த காரியம் மாலை நேரம் தாமதமாகலாம்.




நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினையொன்றில் மாற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், வாகனத்தை பராமரிக்கும் எண்ணம் உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.




ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், உற்சாகத்தோடு செயற்படும் நாள்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

உதவி செய்தவரை மறக்காத எண்ணம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை திட்டங்கள் மக்களை பாதிக்கக் கூடாது

## சித்தார்த்தன் எம்.பி



(அராலி)

பூநகரி, மன்னார் பகுதிகளில் அமைக்கவிருக்கும் காற்றாலைகள் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத வகையில் அமைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அவர் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரி, மன்னார் பகுதிகளிலே விலை மனு கோரப்படாமல் காற்றாலை மின் பிறப்பாக்கிகள் உருவாக்கப்பட இருக்கின்றன. இந்திய முதலீட்டாளர்கள் இதற்கான முதலீட்டை செய்ய இருக்கின்றார்கள் என்ற செய்திகள் பரவிக் கொண்டு இருக்கின்றன.

இதிலே விலை மனு கோரப்படவில்லை என்ற குற்றச்சாட்டை சிலர் முன்வைக்கின்றார்கள். அதே நேரத்தில் இந்த முதலீடுகள் வரவேண்டும் என சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றார்கள்.

இந்த காற்றாலை மூலம் சமூகத்திற்கு பிரச்சினைகள் அல்லது பாதிப்புகள் ஏற்படும் என கூறியுள்ளார்கள். விஞ்ஞான ரீதியாக அது எந்தளவுக்கு சரி என்று எனக்கு தெரியவில்லை. ஆனாலும் இந்த விடயங்கள் எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்து இந்த முதலீட்டை செய்ய விடுவது சரி என்று தான் நான் நினைக்கிறேன்.

அது இந்திய கம்பனிகளாக இருக்கலாம் அல்லது வேறு கம்பனிகளாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் எமது மக்களுக்கு பாதிப்பு இல்லாதவாறு இருக்க வேண்டும் என்பது தான் எனது கருத்து என அவர் மேலும் தெரிவித்தார்.(4-104)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசைஅரங்கு நிகழ்வில் நாளை 4 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு விக்னேஸ்வரி நரேந்திரா மாணவர்களால் குழு இசை நடத்தப்படவுள்ளது.

இதன்போது வயலின்- அ.ஜெயராம், மிருதங்கம்- ம.லோகேந்திரன், நெறியாள்கை- விக்கினேஸ்வரி நரேந்திரா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம்பெறவுள்ள இசை அரங்கு நிகழ்வில் பாட்டு-நவரட்ணம் பரந்தாமன், வயலின்- இ.நிரோஜன், மிருதங்கம்- வ.ரமணசர்மா, கஞ்சிரா-ர.யசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

# வாள் மற்றும் கோடரியுடன் யாழில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் கட்டுடையில் வாள் மற்றும் கோடரியுடன் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவலுக்கமைய மானிப்பாய் கட்டுடை பகுதிக்கு விரைந்த பொழுது வாள் மற்றும் கைக்கோடரியுடன் நடந்து சென்ற நபரையே பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

குறித்த நபர் வன்முறை செயலுக்காக இவ்வாறு சென்றிருக்க கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையில் குறித்த 29வயதான இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4)

# இலங்கைக்கு எந்நிலையிலும் ஒத்துழைப்பு வழங்குவோம்

## ஜப்பான் பிரதிநிதிகள் குழு உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள தகஷிதி யுசுகே தலைமையிலான மேலவை அமைச்சர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி ஆகியோருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நிதியமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது செஹான் சேமசிங்க கருத்து தெரிவிக்கையில்,இலங்கை விரைவான பொருளாதார ஸ்திரப்படுத்தலை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. சர்வதேச ஒத்துழைப்புக்கு மத்தியில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து இலங்கை மீட்சி பெறுவதற்கு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் ஜப்பான் ஆரம்பத்தில் இருந்து இலங்கைக்கு சாதகமாக செயற்படுவது வரவேற்கத்தக்கது என தெரிவித்தார்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டும் இலங்கை வலுவானதொரு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு எந் நிலையிலும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். என தகஷிதி யுசுகே தலைமையிலான மேலவை அமைச்சர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூது வர் உறுதிய ளித்துள்ளனர். (4)

# பாரிய மக்கள் போராட்டம் மீண்டும் வெடிக்கும்

## புதிய மாக்சிச லெனினிச கட்சி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் சாத்தியம் உள்ளதாக புதிய மாக்சிச லெனினிச கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிச்சயமாக நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்பட சாத்தியம் உள்ளதுடன். வரிசை ஏற்படும் அபாயம் தற்பொழுது தலைதூக்க வழி கோருகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளினூடாக கடன் வாங்குகின்றார்கள் தவிர கடன் கொடுப்பதாக இல்லை.

இந்த ஆட்சியாளர்கள் ஒரு கடனை அடைப்பதற்கு மேலும் பல கடன்களை பெறுகின்றார்கள்.நாட்டினுடைய உற்பத்தி அதிகரிக்கப்பட்டால் மாத்திரமே கடன் தொகைகளை திரும்ப செலுத்த முடியும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஏற்றவாறு அமையவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (4-104)



மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை சாவகச்சேரியில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் பெருமளவானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினார்கள். (படம்- சுபேசன், கஜிந்தன்)



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 38ம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று காலை தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் இடம்பெற்றது. (படம்- கஜிந்தன், சிவகரன்)

# கண்ணீர் அஞ்சலி



"சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளரும், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியருமாகிய திரு. ஞா.மில்ற்ரன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி.

**ஞா.மேரி அற்புதமலர்**

அவர்களின் திடீர் மறைவை கேள்விப்பட்டு அதற்கான ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்."

(16921)

யாழ்.மாவட்ட ஆணையாளர், உதவி மாவட்ட ஆணையாளர்கள், உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள், சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 405

Viber 076 636 3378



# இனப்பிரச்சினையைத் தீர்க்க இதுவே தகுந்த நேரம்

**“ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்த முற்படுபவர்களை கட்டுப்படுத்த வேண்டும். தமிழினத்துக்கான தீர்வை விரைந்து பெற்றுத் தர முன்வர வேண்டும். இதுவே நாட்டுக்கு நன்மை தரும். ”**

இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு இதுவே சரியான தருணமாகக் கணிக்கப்பட்டுள்ளது. மாறாக இம்முறை இனப்பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்ளாமல் விட்டால் இனி ஒரு போதும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய சாத்தியமில்லை என்பது அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பாகும்.

இலங்கையில் முன்னொரு போதும் ஏற்பட்டிராத பல மாற்றங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. அவ்வாறான மாற்றக்களினூடே பெறப்பட்ட தெளிவின் வெளிப்பாடே இனப்பிரச்சினைக்கான தீர்வை இப்போது பெற்றுக் கொள்ள வேண்டும் என கணித்திருக்கிறார்கள்.

இலங்கை எனும் அழகிய நாடு இன்று மிக மோசமான பொருளாதார நிலையில் இருக்கின்றது எனின் போரின் தாக்கத்தையே கூறிவிடமுடியும்.

போர் ஒரு நாட்டின் வளர்சியைப் பாதித்தது எனும் வரலாற்றிற்கு நாம் அனைவரும் பாத்திரவாதிகள் ஆகிவிட்டோம் எனும் குற்ற உணர்வு எம் ஒவ்வொருவரிடத்தேயும் எழவில்லை எனின் இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினை ஒருபோதும் தீர்க்கப்படாது. காலணித்துவ ஆட்சியின் பிடியிலிருந்து விடுபட்டு தன்னிறைவு காணும் நிலையில் நாடு இருந்த போதே இனங்களுக்கிடையில் பிரளயம் ஏற்படத் தொடங்கியது. அந்தப் பிரளயம் இன்று வரை தீர்வதாய்த் தெரியவில்லை.

இதற்கு இனவாத, மதவாதப் பெரும்பான்மை அரசியல் தலைவர்களே முற்று முழுதான பொறுப்பாளிகள் என்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். எந்தப் பிரச்சினையும் சிறிதாக இருக்கும் போது அதை இலகுவில் தீர்த்து விட முடியும்.

அரசியல் தலைவர்கள் இனங்களுக்கிடையிலான பிரச்சினையையும் ஆரம்பத்தில் தீர்த்து வைக்க முன்வந்திருப்பார்களாயின் நிச்சயம் அநியாயமாய் இவ்வளவு உயிர்களும் பறிபோயிருக்காது என்பது உறுதியானது.

ஆயினும் அதற்கு இனவாத, மதவாத சிந்தனையினைக் கொண்ட பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை.

அவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அரசியல் ரீதியா.க பாரிய தாக்கத்தைச் செலுத்தியது.

அந்தத் தாக்கம் இலங்கையில் தற்போதைய இறுக்க நிலைக்குக் காரணமாகிவிட்டது.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் எழும் போது அதை சுமுகமாகத் தீர்க்கும் வழிவகைகள் இருந்தும் அதைத் தீர்க்கமால் அந்தப் பிரச்சினையை வைத்துக் கொண்டு அதற்கு இனவாதத் தீயை ஊற்றி பெரும்பான்மை சிங்கள மக்களைத் தூண்டி விட அந்தத் தூண்டல் சிறுபான்மைத் தமிழனத்தில் பிரயோகிக்கப் பட அதற்கு எதிர் வினையினை தமிழினினம் காட்ட நிலை கைமீறிப் போனதை நாம் அனைவரும் அறிந்ததே. தற்போது நாடு ஸ்திரத்தன்மையின்றி பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. ஒருபோதும் இல்லாத நாட்டின் நிலைக்கு முன்னைய ஆட்சியாளர்களான ராஜபக்ஷ ஆட்சியே காரணம் எனக் கூறி தெற்கில் மக்கள் போராட்டம் வெடித்தது.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நடந்த குறித்த போராட்டத்தின் வீரியம் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து இராஜினாமச் செய்து வெளிநாட்டுக்குத் தப்பி ஓடும் அளவிற்கு இருந்தது.




அதன்பின் பாரிய இழுபறிகள், போராட்டங்கள், கைதுகள் போன்றவற்றைக் கடந்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார்.

அவர் ஜனாதிபதியானதும் இலங்கையில் உள்ள இனங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவே தகுந்த நேரம் என்று கூறி தான் அக்குறைபாட்டைத் தீர்ப்பேன் என்று முன்மொழிந்தார்.

ஜனாதிபதியின் குறித்த பேச்சை சிங்கள மக்கள் முதல் பௌத்த தேரர்கள் வரை ஏற்றுக் கொண்டனர்.

துரதிஷ்டம் தற்போது மீண்டும் மத ரீதியான பிரச்சினைகள் எழ ஆரம்பித்துவிட்டன.

குறித்த பிரச்சினைக்கும் ஏற்கனவே கூறியது போல இனவாத, மதவாத அரசியல் தலைவர்களும் பௌத்த தேரர்களுமே காரணமாக இருக்கின்றனர்.

தமிழர் பூர்வீக நிலங்களை அபகரிப்பதுடன் அது சிங்கள பௌத்தத்திற்குச் சொந்தமானது என கூறிவருவதுடன் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை மீண்டும் தோற்றுவிக்கும் வகையில் நடந்து கொள்கிறார்கள்.

இந்த நேரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்த முற்படுபவர்களை கட்டுப்படுத்த வேண்டும்.

அத்துடன் தமிழினத்துக்கான தீர்வை விரைந்து பெற்றுத் தர முன்வர வேண்டும். ஏனென்றால் தற்போது சென்று கொண்டிருக்கும் நிலை இன, மத ரீதியான கொதிநிலையை ஏற்படுத்தும் செயற்றிட்ட நிலையே.

இதைத்தடுத்து நிறுத்தி தமிழினத்துக்கு வழங்க வேண்டிய அதிகாரங்களை வழங்கி அவர்களை அவர்கள் பூமியில் நிம்மதியாக வாழ வழிவகுக்க வேண்டும்.


இதுவே தற்போதைய தேவை. ஏனெனில் மீண்டும் ஒரு இனப்போர் வெடிக்குமாக இருந்தால் இலங்கை எப்படிப்பட்ட நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்பதை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## நீதிமன்றை அவமதித்தவர்களை சிறையில் அடைக்க வேண்டும்



**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். குருந்தூர் மலையில எந்தவொரு கட்டுமானப்பணியும் மேற்கொள்ளக் கூடாது என்று நீதிமன்றில் உத்தரவிட்டதற்குப் பிறகு, நீதிமன்ற உத்தரவையும் மீறி அங்கு விகாரைக்கான கட்டுமானப் பணி நடந்துள்ளது.

இது விடயத்தில் தொல்லியல் திணைக்களம் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளதாக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி கட்டளையிட்டுள்ளது.

கூடவே நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றுகின்ற பணியில இருந்து பொலிஸார் விலகியுள்ளனர் என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகையால், தொல்லியல் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராக நீதிமன்றத்தை அவமதிப்புச் செய்த குற்றத்தின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனையை வழங்க நடவடிக்கை எடுக்க வேணும் எண்டொரு தீர்மானத்தை நிறைவேற்றுவோம் எனக் கூற, ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து நின்று மேற்குறித்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

அதனைத் தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** அதுசரி, எங்க இன்னமும் கங்காணியைக் காணவில்லை. என்ன? சங்கதியோ. இவ்வாறு மூப்பர் கூறி முடிப்பதற்குள் கங்காணி கார்த்திகேயன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்த சாத்திரியார், இந்தா கங்காணியார் வந்திட்டார். நல்லூருக்குப் போயிற்று வாறார் போல...

சாத்திரியார் சொல்லி முடிப்பதற்குள் இடையில் குறுக்கிட்ட கங்காணியார்; இந்தா சாத்திரியார் சாத்திரம் பார்த்த மாதிரி சொல்லிப் போட்டார்.

**விதானையார்:-** அது சரி, எப்படி நல்லூர் முருகனுக்குச் சனங்கள்.

**கங்காணி:-** நல்லூர் முருகனுக்கு என்ன குறை. மஞ்சத் திருவிழாவில அடியார் கூட்டம் அலை மோதியது.

அதேபோல ஒவ்வொரு நாளும் சனக்கூட்டம். அதிலும் புலம்பெயர்ந்த நாடுகளில இருந்தும் நம் உறவுகள் நல்லூர் முருகனைத் தரிசிக்க நிறைய வந்திருக்கினம்.

எங்கட ஈழத் தமிழினத்தின்ர பெருமை எண்டால் அது நல்லூர்க் கந்தசுவாமி தானே.

நல்லூர் முருகன் ஆலய நிர்வாகத்தை பார்த்து தமிழகத்து இந்து ஆலயங்கள் நடந்து கொள்ள வேணும் எண்டு பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை கூறியிருந்தார்.

அதேபோல உலகத்திலேயே நல்லூர் முருகன் ஆலய நிர்வாகம் தான் தலை சிறந்தது எண்டு நித்தியானந்த சுவாமிகள் கூறினார்.

அந்தவகையில இன்னமும் ஒரு ரூபாயில அர்ச்சனை செய்கின்ற அற்புதம் வேறு எங்கும் காணமுடியாது. இருந்தும் ஒரு மனக்குறை இருக்குது.

**பண்டிதர்:-** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:-** நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலத்தில வேற்பெருமான் வீதியுலா வரும் போது, சிலர் சேட் அணிந்து கொண்டு நிற்பினம். இருந்தும் அவர்களை எட்டப் போகுமாறு கோயில் தொண்டர்கள் கூறுவினம். எங்கட பண்பாட்டின்படி வேட்டி சால்வை அணிந்து கோயிலுக்குப் போறது தான் வழக்கம்.

அந்தப் பண்பாட்டை நல்லூர் முருகன் ஆலயத்தில பின்பற்ற வேணும் என்பதில மாற்றுக் கருத்தில்லை. ஆனாலும் வேட்டி அணிந்து சேட் போட்டுக் கொண்டு வெளிவீதியில நின்று கந்தப் பெருமானைத் தரிசிக்கிறவர்களை எட்டிய தூரத்திற்குச் செல்லுமாறு கூறுவது அவ்வளவு நல்லதாக எனக்குத் தெரியல்ல.

அதிலும் சேட் அணிந்தவர்களை எட்டப் போகுமாறு தொண்டர்கள் கூறுவதைப் பார்க்கும் போது, நல்லூர் முருகனுக்குச் சேட்தான் பரம எதிரிபோல நிலைமை இருக்குது.

**பண்டிதர்:-** உண்மை தான். நல்லூர் முருகன் எங்கள் தமிழ்த் தலைவன். அவன் வைதாரையும் வாழ வைப் பான்.

இராமன் இராவணனை வதம் செய்தான். ஆனால் முருகன் சூரனை ஆட்கொண்டான். இங்கு தான் முருகன்ர பெருமை புலப்படும்.

**கங்காணி:-** சில பேருக்கு சேட் கழட்ட முடியாத நிலைமைகள் இருக்கலாம். அதேநேரம் முருகனை ஒருக்கால் பார்க்க வேணும் எண்ட பேரவாவும் இருக்கும்.

இந்த இடத்தில முருகன் வருகிறார். சேட்டோட நில்லாதிங்க எண்டு சொல்லும்போது அட, அந்த முருகன் தான் இப்படி எனக்குச் சொல்லுகிறானோ, முருகனுக்கு என்னில விருப்பமில்லையோ எண்டு நினைக்கிற கட்டங்களும் இருக்குது.

இந்தக் கட்டங்கள் மனதை நோகடித்துப் போடும்.

ஆகையால, ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அங்கால சேட்டோட நிண்டு முருகனைத் தரிசிக்கலாம் எண்ட வரையறை இருக்க வேணும்.

அதோட சேட் அணிந்தவர்களுக்கு பக்குவமாக எடுத்துச் சொல்லுறதும் முக்கியம். ஏனெண்டால் சேட்டோட வந்தவர்களும் முருகனை வழிபடத் தானே வந்தவர்கள்.

அதிலும் முக்கியம், தங்களை அடையாளப்படுத்தக்கூடிய தொண்டர்கள் மட்டும்தான் சேட் அணிந்தவர்களோட கதைக்க வேணும்.


இதைவிட்டிட்டு எல்லோரும் கதைக்க வெளிக்கிட்டால் அது கரைச்சலாகப் போய்விடும்.

ஆகையால, இது விடயத்தில எங்கட நல்லூர் எசமான் நடவடிக்கை எடுப்பார் எண்டு நம்பிறம்.

இவ்வாறு கங்காணி கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போலஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு கட்டத்திற்கு மேல நம்மக்கிட்ட பேச்சுக்கிடையாது வீச்சுத் தான் என ஜெயிலராய் கர்ச்சிக்கிறாரே சூப்பர் ஸ்டார்?






அன்பின் வியாசரே அண்ணன் வீர முத்து வேல் மற்றும் தம்பி பிரக் ஞானந்தா இருவரையும் வாழ்த் துங்களேன்?

**திகான் வடமராட்சி**

**குலம் காக்க வேலெடுத்த தமிழ்க் கடவுள் முருகனின் பொக்கிஷமா வீர முத்துவேலின் சந்திரயான் -3?**

நிலவின் தென் துருவத்தில் யாரும் கால் தடம் பதிக்கவில்லை. ஆனால் இந்தியாவின் சந்திரயான் -3 தென் துருவத்தில் தடம் பதித்து அங்கு ஒட்சிசன் உண்டு என ஆராய்ந்து முடிவு அனுப்பியிருக்கிறது.

விக்கிரம் லாண்டர் நிலவில் இறங்கிய இடம்''சிவசக்தி'' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

நிலவு சிவனின் தலையில் இருக்கிறது என நம் முன்னோர் கதைத்தது இன்று நிஜம் ஆகியிருக்கிறது.

பிறைசூடிய பெருமான் என சிவனை அழைப்பதற்கும் சிவசக்தி என்ற பெயரும் சைவத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது.

இது முடிவல்ல ஆரம்பமே.

**மதுவன் மீசாலை**

**பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீடு முற்றுகை பற்றிக் கூறுங்கள்?**

பௌத்த துறவிகளின் சிந்தனை என்னவென்று இன்னமும் புரியவில்லை.

இவர்களின் இவ்வாறான செயல் நிச்சயம் தமிழரை சினம் கொள்ள வைக்கும்.

அந்தச் சினம் மீண்டும் ஒரு இனக் கலவரத்திற்கு வழிவகுக்கும்.

சிறுபான்மைத் தமிழினம் என்றால் தாம் குட்ட குட்டக் குனிய வேண்டும் என நினைக்கிறார்கள்.

முதலில் பௌத்த துறவிகள் தமது வேலை எதுவோ அதை மட்டும் மேற்கொண்டால் நல்லது.

இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் இன நல்லிணக்கத்தைக் குழப்புகிறது என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

**ராஜ்நிமல் மந்துவில்**

**ஒரு கட்டத்திற்கு மேல நம்மக்கிட்ட பேச்சுக்கிடையாது வீச்சுத் தான் என ஜெயிலராய் கர்ச்சிக்கிறாரே சூப்பர் ஸ்டார்?**

72 வயதில் ஒருவரால் உலக சினிமாவிற்கே சவால் விட முடிகிறது என்றால் அது ரஜனியால் தான் முடியும்.

ஜெயிலர் படம் வெளியாகி 20 நாட்கள் மட்டுமே. அதன் வசூல் 700 கோடி யைத் தாண்டிவிட்டது.

தமிழ்த் திரையுலகம் ரஜனியை அண்ணாந்து பார்க்கிறது.

நிச்சயம் ரஜனி தமிழ் சினிமாவின் பெருமையாய் இருப்பார்.

அவரின் நடிப்பையும் சண்டைக் காட்சிகளையும் பார்க்கும் போது இவருக்கு வயது 72 ஆ என மெய்சிலிர்க்க வைக்கின்றது.

ஜெயிலர் நிச்சயம் தமிழ் திரையுலகின் மைல்கல்லாக இருக்கும் என்பது சந்தேகம் இல்லை.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**கனேஷ் பருத்தித்துறை**

**அன்பின் வியாசரே அண்ணன் வீர முத்து வேல் மற்றும் தம்பி பிரக் ஞானந்தா இருவரையும் வாழ்த் துங்களேன்?**

இங்கு ஒரு விடயத்தை நாம் பதிவிடுவது காலத்தின் தேவை.

நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் பணி புரியும் விஞ்ஞானிகளில் 30 விகிதமானவர்கள் தமிழர்கள் என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா?

ஆம். அது தான் உண்மை.தமிழன் இல்லாத துறை எதுவும் இல்லை. அவன் இருக்கும் துறை வெற்றி பெறாமலும் இல்லை.

இன்று இந்தியா தலை நிமிர்ந்து நிற்க அண்ணன் வீரமுத்துவேல் ஒரு காரணம் என நினைக்கும் போது மனம் பூரிக்கிறது.

தம்பி பிரக்ஞானந்தா நீ வளர்வதற்கு, உயர்வதற்கு இடமுண்டு.இந்த சிறிய வயதில் மலைகளுடன் மோதுகிறாய் எனின் நீ அசைக்க முடியாத மலையாய் உயர்வாய்.

சாதனைத் தமிழர்கள் இருவருக்கும் வாழ்த்துக்கள்.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**ரணில் அரசு தமிழினத்துக்கு தீர்வு தருமாமே உண்மையா?**

நாற்பது; ஐம்பது வருடங்களாக புரையோடிக் கிடக்கும் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை ரணில் அரசு தீர்க்க முயல்கிறது.

ஆனால் அவருக்கு ஆதரவு தெரிவிக்க யாரும் இல்லை.

எல்லோரும் பேச்சளவில் சரியாய் நடந்து கொள்வார்கள். தீர்வுத் திட்டம் ஒன்று வருகிறது என்றால் அதற்குள் என்ன இருக்கிறது என்று கூடப் பார்க்கமாட்டார்கள் உடனே எதிர்ப்பு- எரிப்பு.

காலம் காலமாக இனவாதத்தை எரியும் நெருப்பில் எண்ணெயாய் ஊற்றுபவர்கள் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

இவர்கள் இருக்கும் வரைஇவ்வாறான தமிழினத்துக்கு தீர்வு என்பது கிடைக்காது.

**சுதன் குப்பிழான்**

**சட்டத்தை இயற்றும் பாராளுமன்றமே நீதிமன்ற தீர்ப்பை விமர்சிக்கிறதே?**

என்ன செய்வது விமர்சித்தவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்றாகி விட்டதே.

தமிழினத்துக்கு ஆதரவாகப் பேசுகிறார் என்று பௌத்த துறவிகள் ஒன்று கூடி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டின் முன்போராட்டம் நடத்துகிறார்கள்.

ஆனால் சட்டத்தை விமர்சித்த சரத் வீரசேகரவை எதிர்த்துக் கேள்வி கேட்க எவரும் முன்வரவில்லை.

இதே ஒரு தமிழர், நீதியையோ, நீதிபதியையோ விமர்சித்திருந்தால் இன்று நிலை எப்படி இருந்திருக்கும்.

தமிழினத்துக்கு நல்ல தலைமை இல்லை. அப்படி இருந்திருந்தால் சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் வாலை ஆட்டுவார்களா என்ன?

**திருவாசகன் மாதகல்**

**நாட்டில் மனிதாபிமானம் எப்படி இருக்கிறது வியாசரே?**

வீதியில் போகும் போது பொலிஸ் நிற்கிறது என்பதற்காக கெட் லைட்டை ஒளிர விட்டு அலேட் செய்துவிட்டுப் போவதுடன் முடிந்து விடுகிறது எம்மவர்களின் மனிதாபிமானம்.

வீதியில் விபத்து ஒன்று நடந்துவிட்டால் அம்புலன்ஸை அழைக்கவும் விபத்துக்குள்ளானவர்களுக்கு முதலுதவி அளிக்கவும் இருக்கும் ஆட்களைவிட அதை ஒளிப்படம் எடுக்கும் ஆட்களே அதிகம்.

எங்கே சென்று கொண்டிருக்கிறது மனிதனின் மனிதாபிமானம்.அனைத்திற்கும் எனக்கேன் வீண்சோலி என விலகிவிடுவது ஒரு நாளும் நல்ல தீர்வை தந்து விடாது என்பதை மனிதன் புரிந்து கொள்ளாத வரை அவன் திருந்த வாய்ப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: நெஞ்சில் ஓர் ஆலயம்
பாடகர் : P.B.ஸ்ரீநிவாஸ்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர்: கண்ணதாசன்



நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
தெய்வம் ஏதுமில்லை
நடந்ததையே நினைத்திருந்தால்
அமைதி என்றுமில்லை
முடிந்த கதை தொடர்வதில்லை
இறைவன் ஏட்டினிலே
தொடர்ந்த கதை முடிவதில்லை
மனிதன் வீட்டினிலே

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
தெய்வம் ஏதுமில்லை....

ஆயிரம் வாசல் இதயம் அதில்
ஆயிரம் எண்ணங்கள் உதயம்
யாரோ வருவார் யாரோ இருப்பார்
வருவதும் போவதும் தெரியாது
ஒருவர் மட்டும் குடியிருந்தால்
துன்பம் ஏதுமில்லை
ஒன்றிருக்க ஒன்று வந்தால்
என்றும் அமைதியில்லை

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
தெய்வம் ஏதுமில்லை...

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லாம் மாறிவரும்
பயணம் முடிந்து விடும்
மாறுவதை புரிந்து கொண்டால்
மயக்கம் தெளிந்து விடும்

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
தெய்வம் ஏதுமில்லை...

### 'தி வாக்னர்' குழுத் தலைவர் மரணத்தின் மர்மம்

# உக்கிரமடையும் ரஷ்ய- உக்ரைன் போர்!

கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது ரஷ்யா-உக்ரைன் போர். அதில், ரஷ்ய ராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த 'தி வாக்னர்' ஆயுதக்குழு, கடந்த ஜூன் மாதம் ரஷ்யாவுக்கு எதிராகவே கிளர்ச்சி செய்தது. இந்த வாக்னர் குழுவின் தலைவரான யெவ்கெனி பிரிகாஷின் உள்ளிட்ட அவரின் படையினர் தற்போது விமான விபத்தில் சிக்கி உயிரிழந்திருப்பது சர்வதேச அரசியலில் பேசுபொருளாகியிருக்கிறது.

"யெவ்கெனி பிரிகாஷின் திட்டமிட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம்" என அமெரிக்கா தரப்பில் சந்தேகங்கள் கிளம்ப, அதுகுறித்து மௌனம் சாதித்து வந்த ரஷ்ய ஜனாதிபதி புடின், தற்போது பதிலளித்திருக்கிறார்.

#### பிரிகோஜின்

முன்னாள் ரஷ்ய அதிகாரி டிமிட்ரி உட்கின் மற்றும் புடினின் முன்னாள் தலைமை சமையல் நிபுணரான யெவ்கெனி பிரிகாஷின் ஆகியோர் இணைந்து, 2014 ஆம் ஆண்டில் 'தி வாக்னர்' ஆயுதக் குழுவை உருவாக்கினர்.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தக் குழுவினர் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் உக்ரைன் மீதான போரில் வாக்னர் குழுவைப் பயன்படுத்தியது ரஷ்யா. கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் போரில் 'தி வாக்னர்' ஆயுதக் குழு முக்கிய பங்கு வகித்தது.

இந்த நிலையில், ரஷ்ய ராணுவம் தங்கள் மீதே தாக்குதல் நடத்துவதாகக் கூறி, ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு எதிராகக் கடந்த ஜூன் மாதம் வாக்னர் படை கிளர்ச்சியில் இறங்கியது. இதனால், ரஷ்யாவில் பதற்றம் ஏற்பட்டு, தலைநகர் மொஸ்கோ உட்பட பல்வேறு பகுதிகளிலும் ராணுவம் குவிக்கப்பட்டது.

அதையடுத்து, பெலாரஸ் நாட்டின் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ, வாக்னர் குழுவுடன் சமரசத்தில் ஈடுபட்டதால், அதன் தலைவர் யெவ்கெனி பிரிகாஷினுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு, பெலாரஸுக்கு நாடு கடத்தப்பட்டார்.

இந்தச் சூழலில், ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலிருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்குச் சென்ற 'எம்ப்ரேயர் லெகசி 600' என்ற தனியார் ஜெட் விமானம், மொஸ்கோவுக்கு வடமேற்கிலுள்ள டேசர் என்ற பகுதியில் சில நாட்களுக்கு முன் வெடித்துச் சிதறியது.

அந்த விமானத்தில் வாக்னர் படைத் தலைவர் யெவ்கெனி பிரிகாஷின், தலைமை படைத் தளபதி டிமிட்ரி உட்கின் ஆகியோரும் பயணம் செய்ததாக ரஷ்ய விமான போக்குவரத்து ஆணையம் கூறியது. இதனால், புடினுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்ட சில நாட்களில் பிரிகோஜின் திட்டமிட்டுக் கொல்லப்பட்டுவிட்டதாகச் சர்வதேச நாடுகளில் சர்ச்சை உருவாகியுள்ளது.

ஒரு புறம் விமான விபத்துக்குக் காரணம் உக்ரைனின் ஏவுகணைத் தாக்குதல்தான் என ரஷ்யத் தரப்பு தெரிவிக்க, அதற்கு உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி மறுப்புத் தெரிவித்திருக்கிறார். மற்றொருபுறம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், 'என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.

ஆனால், இந்தச் சம்பவம் குறித்து நான் ஆச்சரியப்படவில்லை" என்று பொடிவைத்துப் பேசியிருக்கிறார். வாக்னர் குழுவினரோ, மீண்டும் மொஸ்கோவை நோக்கி நாங்கள் முன்னேறுவோம். யெவ்கெனி பிரிகாஷின் உயிருடன் இருப்பதே அனைவருக்கும் நல்லது எனத் தங்களின் செய்திக் குறிப்பில் தெரிவித்திருக்கிறார்கள்.

மௌனம் கலைத்திருக்கும் ரஷ்ய ஜனாதிபதி புடின், "விமான விபத்தில் பலியானவர்கள் உக்ரைன் போரில் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். அவர்களை நாங்கள் நினைவில் கொள்கிறோம், ஒருபோதும் அவர்களை மறக்கமாட்டோம்" என்று பேசியிருக்கிறார்.



சிறிது காலம் சர்வதேச கவனத்திலிருந்து சற்றே விலகியிருந்த ரஷ்ய- உக்ரைன் போர்ச் செய்தி, யெவ்கெனி பிரிகாஷினின் மரணம் குறித்த செய்தியால் மீண்டும் பற்றிக்கொண்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவிலும் ஆக்கம் கடிது!



ஆக்கம்-அழிவு என்பதில் எது இலகுவானது எனக்கேட்டால் நிச்சயம் அழிவையே குறிப்பிடலாம்.

ஆக்கத்திற்கு கடின உழைப்பு, பொறுமை, நிதானம், நேர்மை என்பன தேவை. ஆனால் அழிவுக்கு இவை எவையும் தேவையில்லாதது. அழிவு அரக்க குணத்தின் வெளிப்பாடே.

ஆக்கம் என்பதற்குள் விவசாயம் - விவசாயி முதன்மை பெற்று நிற்கின்றான்.

நாம் மூன்று வேளையும் நிம்மதியாக பசிக்கு உணவு உண்ணுகின்றோம் என்றால் எங்கோ ஒரு மூலையில் விவசாயி அந்தப் பயிரை விளைவிக்க தன் வியர்வையை நீராய் இறைத்திருக்கிறான் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் உண்ணும் ஒவ்வொரு பருக்கை சோறும் விவசாயி மனித குலத்திற்கு இட்ட பிச்சை என்பது தான் நிதர்சனமானது.

அப்பேற்பட்ட விவசாயியை நாம் தெய்வமாய் பூசிக்க வேண்டும். ஆயினும் விவசாயமும் விவசாயியும் உலகில் மதிப்பிழந்து நிற்கதியாய் நின்றாலும் உலகுக்கு சோறு போட்டுக் கொண்டிருக்கிறான் அவன்.

இதை நாம் கூறும் போது அப்படியென்றால் நாமெல்லாம் எமது வேலையை விட்டு விட்டு விவசாயம் மேற்கொள்ள வேண்டு மென்று நீர் கூறுகிறீரோ என்ற எண்ணம் உங்களுக்குள் மேலோங்கும்.

அதுதான் இல்லை.

நாம் விவசாயத்தின், விவசாயியின் துன்பத்தை புரிந்து கொண்டாலே போதும்.

முன்பெல்லாம் வீட்டில் ஒரு விசேடம் என்றால் பத்து நாட்களுக்கு முன் உறவுகள் ஒன்று கூடிவிடும். வீடு அலங்கரிக்கப்படும். வீட்டின் பின்பக்கத்தில் கிடங்கு வெட்டி கல் வைத்து பெரிய கிடாரம் வைத்து சமைக்கத் தொடங்கி விடுவோம்.

விசேட தினத்தன்று வந்தவர்களுக்கு தலைவாழை இலை வைத்து கேட்டுக் கேட்டு உபசரித்து வயிறும் மனசும் நிறையும் படி வழி அனுப்புவோம்.

ஆனால் இப்போது மண்டபக் கலாசாரம்.

மண்ணாங்கட்டி; வந்தவர் யார், போனவர் யார், உண்டவர் யார், உண்ணாதவர் யார் என்பதெல்லாம் வீடியோக்காரனின் கையிலே தங்கி இருக்கிறது.

செல்ப் சேர்வீஸ் (தாங்களே போய் போட்டு சாப்பிடும் கலாசாரம்) இதுதான் பாசன். இதில் என்ன விடயம் என்றால் இருக்கும் அயிற்றம் அனைத்தையும் கண்டமேனிக்கு கோப்பையில் நிறைத்துக் கொண்டு போய் வட்ட மேசையில் இருந்து உண்ணத் தொடங்கினால் இரண்டு வாயுடன் பசி அடங்கிவிடும்.

எடுத்த உணவு அவ்வளவும் குப்பைத் தொட்டியை நிறைத்துவிடும்.

செல்வ் சேர்விஸ் பரிமாற்றத்தில் உண்ணப்படும் உணவின் அளவை விட கொட்டப்படும் உணவின் அளவே அதிகமானது என்பதை குப்பைத் தொட்டிகளை ஆராய்ந்தால் புரியும்.

இந்த உலகில் ஒரு வேளை உண்ண வழியின்றி எத்தனை பேர் ஏங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் நாம் உணவை வீணடிப்பது எம்மை நாம் நரகத்திற்குக் கொண்டு செல்லும் செயலே.

ஒரு மனிதன் மூன்று வேளை உணவை உட்கொள்கிறான். அவ்வாறெனின் அவன் ஒரு மாதம் எவ்வளவு உணவை உட்கொள்ளுவான். ஒரு வருடம் எவ்வளவு உட்கொள்ளுவான். அவனின் ஆயுட்காலத்தில் எவ்வளவு உணவை உட்கொள்ளுவான் என்ற கணக்கைப் போட்டுப் பார்த்தால் எமக்கு உணவளித்த விவசாயி தெய்வமாய்த் தெரிவதுடன் நாம் ஒரு பருக்கை உணவைக் கூட வீண் விரயம் செய்ய மாட்டோம்.

உலக சமநிலை குழம்பிவிட்டது. இயற்கை அனர்த்தம் மனித குலத்தை அழிக்கிறது. புயல், பூமி அதிர்சி, எரிமலை வெடிப்பு என அழிவுகள் உலகை புரட் டிப் போடுகிறது.

மழை பொய்த்து விட்டது. வெப்பம் அதிகரித்துவிட்டது. வறட்சி தலை விரித்தாடுகிறது. பொய்த்த மழை போகம் தவறி பெய்து கொட்டித் தீர்த்து விடுகிறது.

இவற்றிற்கு நடுவில் போராடி எமக்கு உண்ண உணவைத் தரும் விவ சாயியின் கஷ்டத்தை புரிந்து கொள் வோம்.

இது வெறும் தகவலுக்காகனதல்ல. நம் மனித குலம் சிந்திப்பதற்கானது. நாகரிக மோகத்தில் சிக்கி ஆரோக்கியத்தை இழக்கும் மனித குலத்திற்கான எச்சரிக்கை பதிவே இது.

மாவை.நா.கஜேந்திரன்

ஓர் ஊரில் பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் கருமி. ஒருநாள் துறவி ஒருவரைச் சந்தித்து வாழ்க்கைக்கான ஆலோசனையைப் பெறச் சென்றார். துறவிக்கு இவரைப் பற்றி நன்கு தெரியும்.

அவர் என்ன செய்தார் தெரியுமா?

பணக்காரரைக் கண்ணாடி ஜன்னல் அருகே அழைத்துச் சென்றார். “இதன் வழியே பார்த்தால் என்ன தெரிகிறது?” என்று கேட்டார்.

“தெருவில் வருவோர் போவோர் எல்லாம் தெரிகிறார்கள், வாகனங்களும் சனக் கூட்டமும் தெரிகிறது'' என்றார் பணக்காரர்.

பிறகு முகம் பார்க்கும் கண்ணாடியைக் காட்டி, “இதில் பார்த்தால் என்ன தெரிகிறது என்று சொல்” என்றார் துறவி.

“இதில் என் முகம் மட்டும் தான் தெரிகிறது!'' என்றார் பணக்காரர்.


துறவி மீண்டும் கேட்டார், “இரண்டும் கண்ணாடிதான். ஒன்றின் வழியே பிறரது உருவங்களைப் பார்க்க முடிந்தது. மற்றொன்றில் நம் உருவத்தை மட்டுமே பார்க்க முடிந்தது, ஏன்?''

பணக்காரரால் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

இப்போது துறவி சொன்னார்... “கண்ணாடியின் ஒரு பக்கத்தில் ரசத்தைப் பூசிவிட்டால்... ரசம் என்று ஒரு பொருள் கூடுதலாகச் சேர்ந்து விட்டால், மறுபக்கம் பார்க்க முடியாது. நம் உருவத்தையே அது பிரதிபலிக்கிறது. அப்படித்தான் சிறிதளவு பொருள் நம்மிடம் சேர்ந்து விட்டாலும் நம் பரந்துபட்ட பார்வையை அது மறைத்து விடும். நாம் சுயநலம் உடையவர்களாக மாறிவிடுவோம்... புரிகிறதா?''

பணக்காரருக்குப் புரிந்தது. அவர் மனம் தெளிந்தார்.

## வாழ்வின் தத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல் , தேடல் , தேடல்...



தேடல் ஒரு கருவி
தேடல் ஒரு அறிவு
தேடல் ஒரு ஆனந்தம்
தேடல் ஒரு அற்புதம்
தேடல் ஒரு முயற்சி
தேடல் ஒரு அனுபவம்
தேடல் ஒரு சொத்து
தேடல் ஒரு ஊற்று
தேடல் ஒரு பெட்டகம்
தேடல் ஒரு சுரங்கம்
தேடல் ஒரு வாழ்க்கை
தேடல் ஒரு ஆளுமை
தேடல் ஒரு தேடல்
தேடல்,தேடல் ,தேடல்....

பிறேமா தியா,யாழ்ப்பாணம்.


## நீர்வளமே நாட்டின் நிறைவளம்

தரைக்குள்ளே சுரப்பதும் நீர் தான் -இங்கே
நுரையாகி மிதப்பதும் நீர் மேலே நீர்தான்
ஊற்றுநீர் ஆற்றுநீர் தூய்மை -வாழும்
ஊரெல்லாம் வரமாகும் நீர்வளம் தாய்மை

நீரின்றி வாழுதல் அரிது -மனிதர்
நீர் வளம் காத்தலே மாண்பினில் பெரிது
இயற்கையே வரங்களாய் பொலிவு- நீர்
இயல்பின்றி தடை கண்டால் வாழ்விற்கே அழிவு

வளம் கண்டால் பொருளோடு வாழ்வு- அந்த
வளங்காண நீரின்றிப் போனாலே தாழ்வு
தன்னிறைவில் தானே தேட்டம் -எம்
தனம் கொண்ட வாழ்விற்கு நீர்வளமே ஊட்டம்

விரிந்து கிடக்கிறது இயல்பான பாங்கு- புவி
விழைவித்த சந்ததியில் நாமும் ஒரு பங்கு
இயற்கையை காத்தலே கடமை -நாம்
இயல்பாக வாழவந்த வாழ்விற்கும் பெருமை



அ.பூவானந்தம்,வயவை

## மருந்தில்லா நோயுடன்

நெற்றி முட்டும் தீராந்திக் குடில்களில்
குனிந்து புகுந்த தலை முற்றத்திலும்
நிமிர்வாயில்லை

மண்ணைக் கவ்விக் கொண்டு
தன்னைத் தான் புதைக்கின்றது
தாழ்ந்தவனின் பார்வை

மனித ஊனம்
குடித்து நிறுத்தப்படுகின்றது
பல வரண்ட மனங்களின் விக்கல்கள்
குழிகளில் முடப்பட்ட
பிரேதச் சன்னங்களைக்கூடத்
தோண்டி அணிந்து கொண்ட
மனிதக் கழுத்துக்கள்
தலை விரித்த பிசாசு போல்
பூமியை சிப்பிலியாட்டும்
புகையற்ற யாசகசாலைகளில்
சீசிச் சிரிக்கின்றன
உடைந்த கண்ணாடியின் விம்பங்
களுடன்

நான்கைத் தன்பக்கம் மடித்து
ஒன்றை பிறருக்கு நீட்டி
தப்பித்துக் கொள்கின்றது
பொறுப்புக்களின் உத்தரவாதம்

மிதித்து உழக்கிய
கோலங்களில்
அலைந்த வண்ணத்தில்
பிரிப்பாரற்று கலந்து
தனித்துவம் இழந்து
தீண்டாமையாக தேங்கி நாறும்
சுயத்தின் எண்ணம்
நாளை விடியும் என்று
மேற்கைப் பார்த்தபடி
மருந்தே இல்லா நோய்களுடன்
வருந்தியே வயதாகின்றது வாழ்வு

பிரமி ,திருகோணமலை.

## மௌனத்தின் தேடல்- 684



## அரிச்சுவடு

அரிவரி வகுப்பு படிக்கும் போது
சிலேற்றுப் பலகையில் சிலேற்றுப்
பென்சிலால் அ,ஆ எழுதி
தொட்டுப் படித்தது அந்தக்காலம்
பாலர் பள்ளி போகும் முன்பே
அலைபேசி தொடுதிரை தன்னில்
தொட்டுப் பயம் பார்ப்பது
இந்தக்காலம்–இது கருவினில்
உருவான திருவோ!

சி.மகாலட்சமி,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 685



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## அன்னமும் எண்ணமும்

சிறார்கள் மிகவும் விரும்பும்
விளையாட்டுப் பொருட்களின்
விற்பனைகள் குறைந்து வருவதும்
கடைகளில் தேங்கி கிடப்பதற்கும்
இளவயதினரை எளிதில் மயக்கும்
கை பேசியும் காரணமாகும்
அமிர்தமும் நஞ்சாவது போல்
மித மிஞ்சிய பாவனைகள்உடல் நலத்திற்கும்
மன வளத்திற்கும்
ஊறென்று கருதப்படுவதால்
இதைக் கட்டுப்படுத்த திட்டமிட்ட
விழிப்புணர்வை வளர்க்க வேண்டும்

க.நாகராசா,நுணாவில்.

## பாசமென்பது

அன்பென்றும் காதலென்றும்
சிக்கிச் சீரழியும் இளையவர்களே
பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும்
மட்டுமல்ல பிற உயிர்களையும்
பரிவுடன் அன்பு செய்யும்
தாத்தா பாட்டிகளிடம்
பாசத்தை கற்றிடுங்கள்

சி.இ. அன்புதுரை
மானிப்பாய்

## கைபேசிக்குள் உலகம்

கையில் கைபேசி வந்தது
தொலைக்காட்சியும் தொலைந்தது
கடிகாரமும் கல்குலேட்டரும்
காணாமல் போனது
கமராவும் கடிதமும் தொலை தூரம் ஆனது
தரணியைப் பார்த்த தலை நிமிராமல் நின்றது

கா.நிரோஜி,
கிளிநொச்சி.

## கொல்லும் வியாதி

தடுக்கு , தொட்டில்
தாலாட்டு ,கிலுகிலுப்பை
காணாமல் போக
இடம்பிடித்தது செல்போன்
இனி என்ன?
உடன் பிறந்தே
கொல்லும் வியாதி
தொடங்கி விட்டது

பிரமன், கொக்கவில்.

## உன் இலக்கியத்தில் தான்

உன் கையளாவிய கூழ்
அமிர்தத்திலும் உயர்ந்தது
உன் மழலை மொழி
குழலிலும் யாழிலும் சிறந்தது
இவற்றை நாம் இனி
இலக்கியத்தில் தான்
படிக்க வேண்டும்

பி.மதுஷ்சன், தையிட்டி.

## விந்தை உலகம்

கந்தை களையும் விந்தை உலகம்
பந்தைப் போல் உன்னை உருட்டி
விளையாடுகிறது –குழந்தாய்
மந்தமாக மாறும் முன்
சிந்தை கொண்டு எழுந்து வா
பொந்து கொத்தும் மரங்கொத்தி போல

அ.ஞானப்பிரகாசம்,
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல்புறா

## மதி சொன்ன கதை

இன்னோர் உருவமும் சற்று தூரத்தே கரையில் இழுக்கப்பட்டுத் தளைகளில் பிணைக்கப்பட்டிருந்த பெரும் படகுகளின் மறைவில் நின்று இமை கொட்டாமல் தங்களைக் கவனித்துக் கொண்டிருந்ததை அறியாமலும், தங்களிருவரைத் தவிர வேறோர் உலகம் சுற்றிலும் உண்டு என்பதைக்கூட நினையாமலும், தனித்த தங்கள் நிலையை மட்டுமே எண்ணி இன்பம் உடல் பூராவும் துழாவிக் கிளம்பிய ஏதேதோ இன்ப உணர்ச்சியால் தத்தளித்துக் கொண்டு நீண்ட நேரம் பேசாமலே இளையபல்லவனும் மஞ்சளழகியும் நின்றபடி நின்றுவிட்டார்கள். அப்படி நின்ற அந்த இருவரில் இளையபல்லவன் நிலையே மிகவும் பரிதாபத்துக்குரியதாயிருந்து. வாழ்க்கையின் இன்ப நாடகம் துவங்கும் சமயங்களில், பலவீனமான இனம் என்று கூறப்படும் பெண்ணினமே பலத்துடன் நிற்கிறது.

பலமுள்ள இனத்தைச் சேர்ந்த ஆண் வர்க்கத்தின் நிலைதான் அதிக சங்கடத்துக்கும் சித்திரவதைக்கும் இலக்காகிறது. இதற்குக் காரணம் பெண்ணினம் தன் கவர்ச்சியின் பலத்தையும் ஆணினத்தின் பலவீனத்தையும் உணர்ந்திருப்பது தான். பெண் இனத்துக்கே இலக்கணமாக விளங்கிய மஞ்சளழகியும் அந்தக் காலை வெயிலில், கடலலைகளை நோக்கி நின்ற அந்த நேரத்தில், தன் சக்தியையும் இளையபல்லவனின் பலவீனத்தையும் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தான்.

அவனளித்த மேல்சீலையை வாங்கிக் கொண்டும் அவனுக்கும் கரைக்கும் முதுகைக் காட்டிக் கொண்டு பெருங்கடலின் நீர்ப்பரப்பை நோக்கித் தலை துவட்ட முயன்ற மஞ்சளழகி, பின்னால் நின்ற இளையபல்லவனின் கண்கள் தன் ஒவ்வோர் அசைவையும் கவனிக்கும் என்பதை உணர்ந்திருந்தாளாதலால், உள்ளுக்குள் நகைத்துக் கொண்டாளானாலும் அந்த உணர்வால் மிகுந்த நாணமும் அவளை ஆட்கொள்ளவே அவள் கைகளை நன்றாக மேலுக்குத் தூக்காமல் அவசியத்துக்குக் குறைவாகவே தூக்கித் தலையில் சீலையை விரித்துக் குழலில் சுற்றி முறுக்கி அதைத் தோள்புறமாக முன்னுக்கு இழுத்துப் பிழிந்தாள். குழலை நன்றாகச் சீலையால் முறுக்கிப் பிழிந்த பின் கூந்தலை நன்றாக உதறித் தட்டி மறுபடியும் முதுகுப்புறம் அதை விசிறிவிட்டாள். நீண்டு அடர்ந்த அவள் குழல்கள் நன்றாக முதுகுப்புறத்தில் படர்ந்து அதுவரை இளையபல்லவன் கண்களைப் பறித்துக் கொண்டிருந்த அவள் மஞ்சள் நிறத் தங்க முதுகுப் புறத்தை மட்டுமின்றி, இடுப்புச் சீலைக்கு வெகு தூரம் கீழிறங்கிய அழகிடங்களை அந்த ஆண்மகன் துஷ்டப் பார்வையிலிருந்து காக்க இஷ்டப்பட்டன போல் மறைத்துத் திரையிட்டன.

அவள் கைகள் அசைந்தபோது கைகளின் அசைவால் முதுகுச் சதை அசைந்தபோது அந்த முதுகில் கிடந்த நீர் முத்துகளும் அசைந்ததைக் கண்ட சோழர் படைத் தலைவன், 'இயற்கையும் பெரிய பொற்கொல்லன் தான். இல்லாவிட்டால் இந்த மஞ்சள் நிறத் தங்கத் தகட்டில் வெண் முத்துகளைப் பொருத்தி இப்படியும் அப்படியும் இழுத்துக் காட்டுவானா?' என்று அந்த அசைவுக்குக் காரணமும் கூறினான்.

பிழிந்து உதறிவிட்ட குழல்கள் ஒரே சீராக இருந்ததையும் அவற்றின் இணையற்ற கருமையில் அடுத்திருந்த தோள்கள் இன்னுமதிக மஞ்சளுடன் ஒளிவட்டத்தையும் கண்ட இளையபல்லவன் சற்றுத் துணிவுடன் அவளை நெருங்கி பட்டையாகப் பின்னால் தொங்கி அவள் குழல்களைத் தன் இரு கைகளாலும் கோதிக் கோதிப் பிரித்துவிடத் தொடங்கினான்.

'இத்தனை சீராகக் குழல்களைப் பிரிக்க எங்கு கற்றுக் கொண்டார் இவர். ஒருவேளை வேறு இடத்தில் இதே வித்தையைப் பயின்றிருக்கிறாரோ?' என்ற நினைப்பால் ஓரளவு பொறாமையும் சந்தேகமும் கூடக் கொண்டாள் அந்தத் தங்கக் கிளி. அந்தப் பொறாமைக்கும் சந்தேகத்துக்கும் சந்தேகத்தால் ஏற்பட்ட கோபத்துக்கும் காரணமிக்கவே செய்தது.

(தொடரும்...)


---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 21

நமது கல்வி முறையில் போதிப்பதை விடச் சோதிப்பது அதிகமாக இருக்கிறது.

ஓராண்டு வரைக்கும் கூட நமது கல்வி நம் மாணவனுக்கு அறிவு கொடுக்கவில்லையென்றால் நாம் நம் கல்வி முறையின் ஆண்மைக்கு ஒரு பரீட்சை வைக்க வேண்டியிருக்கிறது.

இந்தத் தேர்வுமுறை எழுத்தறிவு பெறும் முதல் தலைமுறையின் குழந்தைகளையே கொன்று குவிக்கிறது.



காதல் தோல்விகளும் தேர்வுத் தோல்விகளும் நம் நாட்டின் ஜனத் தொகையைக் கணிசமாகக் குறைத்திருக்கின்றன என்பது கவலைக்குரிய ஓர் உண்மையாகும்.

எழுத்தறிவே இல்லாத குடும்பத்தில் வறுமையின் இருட்டுக்குள் இருந்து வருகிறவன் எப்படி ஒரே வருடத்தில் சூரியனாகச் சுடர்விட முடியும்,

நமது சமூகப்பொறுப்பு என்பது அவர்களுக்கு அறிவூட்டுவதுதானே அன்றி, அவ நம்பிக்கை ஊட்டுவது அன்று.

"அவர்கள் மூளையில்
விதையைப் போல் தூவப்பட
வேண்டிய அறிவு
ஆணியைப் போல்
அறையப் படுகிறது.

இந்த

## தாமத ஞானம்

இள மூங்கில்களை
ஐந்திலேயே வளைக்க
ஆசைப்பட்டார்கள்!

பல மூங்கில்கள்
வளைக்கும் அவசரத்தில்
முறிக்கப்பட்டதால்
விறகுக் கடையில்
விற்பனையாயின!"

என்று என்னைப் போன்றவர்கள் ஆதங்கப்பட்டு அழுத கண்ணீரைத் துடைப்பதற்குக் கல்விக் கழகத்தின் சுட்டு விரலுக்குச் சுறுசுறுப்பு வந்திருக்கிறது.

### தெலுங்கு பாரதி

தெலுங்கு தேசத்தின் ஒரு மகா கவிஞன் மரித்துப் போனான்.

பாரதியார் மறைந்த போது பதினொரு வயது நிரம்பியவனாக அந்தச் சிவப்புக் கவிஞன் தன் இமைகளையும் பேனாவையும் மூடிக் கொண்டான்.

தெலுங்கு தேசத்தின் இன்றை இலக்கிய ரதங்கள் போய்க் கொண்டிருப்பதெல்லாம் அவன் போட்டுக் கொடுத்த பாதையிலேதான். ஸ்ரீஸ்ரீ என்று செல்லமாக அழைக்கப்பட்ட ஸ்ரீரங்கம் ஸ்ரீ நிவாசராவின் உடம்பு நெருப்பில் நீராடி நீறாகி விட்டது.

மதக் கிடங்குகளுக்குள் மயக்கம் தெளியாமல் கிடந்த இலக்கியங்களை எழுப்பி செருப்பில்லாத பாதங்களோடு தகிக்கும் தார்ச்சாலைகளில் நடக்கவிட்ட பெருமை ஸ்ரீஸ்ரீயையே சேரும்.

"உலுத்துப் போன
எலும்பர்களே
உயிர்க் காம்பிலிருந்து
உதிரவிருக்கும்
கிழட்டுச் சருகுகளே!
உதிர்ந்து போங்கள்.

குலையாத உறுதியில்
கொதிக்கும் குருதியில்
சரித்திரம் எழுதப் போகும்
சக்தியின் மைந்தர்களே!
வாருங்கள்... வாருங்கள்!"

என்று தன் இருபத்து நான்காவது வயதிலேயே 'மகா பிரஸ்தானம்' எழுதிய மகா கவிஞன் அவன்.

பிரெஞ்சுப் புரட்சிக்கும் ரஷ்யப் புரட்சிக்கும் பின்னர் உலகை இலக்கியம் நிறம் மாறத் தொடங்கியது.

இறந்த காலங்களும் இல்லாத காலங்களுமே இலக்கியத்தின் கருப்பொருளாயிருந்த காலம் கண் மூடியது. இந்த மாற்றத்தை அமுல்படுத்துவதற்கு அந்தந்த மொழியில் தலைமை தாங்கியவன் தளபதியாகி விட்டான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

363

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இரத்தச்சோகை நிலையை தவிர்ப்பது எப்படி?

இரத்தச்சோகை என்பது உடலில் ஈமோக்குளோபின் அல்லது இரத்தச் சிவப்பு அணுக்கள் குறைவுபடுவதே. ஈமோக்குளோபின் என்பது திசுக்களுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லும் இரத்தச் சிவப்பு அணுக்களிலுள்ள (RBC) இரும்புச்சத்து நிறைந்த புரதமாகும். ஒருவரின் இரத்தத்தில் ஈமோக்குளோபினின் அளவு மிகக் குறைவுபடும் போது இரத்தச்சோகை ஏற்படுகிறது. அதாவது உடலில் போதியளவு ஒட்சிசன் வழ்ங்கப்படாதிருக்கும் நிலையாகும். இது உடல் வெளிறுதல், களைப்பு அல்லது சோர்வு மற்றும் உடற்பலவீனத்தை ஏற்படுத்தலாம்.

இரத்தச்சோகை ஒரு குறுகிய காலத்துக்கு அல்லது ஒரு நீண்ட காலத்துக்கு நீடிக்கலாம். தீவிரம் குறைந்த நிலைமைகளில் உணவு முறையில் ஒரு எளிமையான மாற்றம் தான் சிகிச்சையாக அளிக்கப்படுகிறது. தீவிரம் கூடிய நிலைகளுக்கு மருத்துவச் சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.

**இரத்தச் சோகைக்கான அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்**

இரத்தச்சோகைக்கான அறிகுறிகள் அதன் கடுமை, ஈமோக்குளோபின் எவ்வளவு விரைவாகக் குறைகிறது மற்றும் அதற்கான காரணம் என்ன என்பவற்றைப் பொறுத்திருக்கிறது. ஒரு பிள்ளையின் உடல் எவ்வளவு நன்றாக ஈமோக்குளோபினின் தாழ்ந்த நிலையைச் சமாளிக்கின்றது என்பதிலும் தங்கியுள்ளது. அறிகுறிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.

இரத்தத்தின் சிவப்பு நிறத்துக்கு ஈமோக்குளோபின்தான் காரணமாக இருப்பதால் தோல் வெளிறுதல்.

உடலில் ஒட்சிசனின் அளவு குறைக்கப்பட்டதால் உடலில் சக்தி குறைவுபடுத்தல். உடலின் ஒட்சிசனின் அளவு குறைந்ததால் உடற்பயிற்சி செய்த பின் அல்லது விளையாடிய பின் விரைவான சுவாசம்.

**இரத்தச் சோகைக்கான காரணங்கள் மற்றும் அதன் வகைகள்**

இரத்தச்சோகையில் பலவகைகள் இருக்கின்றன. பொதுவான காரணங்களின் அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஊட்டச்சத்து இரத்தச் சோகைகள்**

இரத்தச்சோகை வகைகள் மிகவும் பொதுவானது இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகையாகும். இது உணவில் இரும்புச்சத்துக் குறைவதால் ஏற்படுகிறது. ஈமோக்குளோபின் தயாரிப்பதற்கு இரும்புச்சத்து தேவை. சாதாரணமாகக் குழந்தைகளுக்கு 6 மாதங்கள் வரைக்கும் தாய்ப்பாலிலுள்ள இரும்புச்சத்து அவர்களுக்குப் போதுமானது. இரும்புச்சத்து உள்ளடக்கப்படாத பசுப்பால் போர் முலாக்கள் அல்லது முழுப்பசுப் பால் மாத்திரம் குடிக்கும் குழந்தைகளுக்கு இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும் ஆபத்து இருக்கிறது. உங்கள் குழந்தை 6 மாதமுடிவில் திடஉணவு உண்ணத் தொடங்காவிட்டால் இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும். முழுமையாக முதிர்ச்சியடைந்த குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் ஆரோக்கியமுள்ள தாய்மார்கள், இரும்புச்சத்து நிறைந்த திட உணவுகள் பரிந்துரை செய்யப்படும் வரையில் 6 மாதங்களுக்குத் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான இரும்புச்சத்தைக் கொண்டிருப்பார்கள். தாய்ப்பாலிலுள்ள இரும்புச்சத்து நன்கு உறிஞ்சப்படும். 6 மாதங்களில் திடஉணவுகள் அறிமுகப்பட்டதிலிருந்து 2 வயதுவரை தாய்ப்பால் கொடுக்கும் படி சிபாரிசு செய்யப்படுகிறது. இது தாய்ப்பால் ஊட்டுதல் மாத்திரமல்ல. ஆனால் சிபாரிசு செய்யப்படும் சமயத்தில் இரும்புச்சத்து நிறைந்த திடஉணவுகள் அறிமுகப்படுத்தப்படாவிட்டால் இரத்தச்சோகை ஏற்படும் ஆபத்து இருக்கிறது.

எமது சமூகத்தில் முறையான தனிநபர் சுகாதாரத்தைப் பின்பற்றாதவர்களுக்குக் கொழுக்கிப்புழுத் தொற்று ஏற்படுவதாலும் இரத்தச்சோகை ஏற்படலாம். உணவில் போலிக் அமிலம் விற்றமின் B12 அல்லது விற்றமின் E குறைவுபடும் போது விற்றமின் குறைவினால் ஏற்படும் இரத்தச்சோகை உண்டாகிறது. ஈமோக்குளோபின் தயாரிப்பதற்கு உடலுக்கு இந்த எல்லா ஊட்டச்சத்துக்களும் தேவைப்படுகின்றன.

**நோயினால் ஏற்படும் இரத்தச் சோகைகள்**

1. அரிவாள் கல இரத்தச்சோகையும் தலை சீமியாவும் சிவப்பு அணுக்களை உருக்குலையச் செய்யும் பரம்பரை வியாதிகளாகும். இந்த உயிரணுக்கள் சாதாரண இரத்தச் சிவப்பு அணுக்களைப் போல உடல் முழுவதும் நன்கு நீந்திச் செல்ல முடியாது. இதனால் உடலுக்குக் குறைந்தளவு ஒட்சிசனே கிடைக்கின்றது.

2. சிறுநீரகம் செயற்படாமற் போதல். புற்றுநோய் மற்றும் க்ரோன்ஸ் நோய் என்பவற்றாலும் தீராத இரத்தச்சோகை ஏற்படலாம். என்பு மச்சைநோய் மற்றும் லூபஸ் நோய் போன்ற தன்னுடல் தாக்கும் நோயினாலும் இரத்தச்சோகை ஏற்படலாம்.

3. அப்ளாஸ்டிக் இரத்தச் சோகை என்பது ஒரு அரிதான மற்றும் கடுமையான நோய். இது உடல் போதிய அள்வு இர்த்த உயிரணுக்களை உற்பத்தி செய்வதை நிறுத்திவிடும். ஒரு பிள்ளை இந்த இரத்தச் சோகை நோயுடன் பிறந்திருக்கலாம் அல்லது ஒரு வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட பின்னர் ஏற்படலாம். அல்லது ஒரு மருந்தின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். சில வேளைகளில் இது இரத்தப் புற்றுநோயின் தொடக்க அறிகுறியாகும்.

**இரத்தச்சோகைக்கான ஆபத் தான காரணிகள்**

இரத்தச்சோகையை விருத்தி செய்வதற்கான உயர்ந்த ஆபத்திலிருக்கும் சில பிள்ளைகளின் பிரிவுகள் இருக்கின்றன. உயர்ந்த ஆபத்துக்குக் காரணமாகக் கூடிய காரணிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.

குறைமாதப் பிரசவம் மற்றும் பிறப்பின் போது எடை குறைவாக இருத்தல். முன்னேற்றமடைந்து வரும் உலகிலிருந்து சமீபத்தில் குடியேற்றம் செய்தல், வறுமை, உடற்பருமன் அல்லது தவறான உணவுப் பழக்கங்கள்.

**இரத்தச்சோகையின் நீண்டகாலப் பாதிப்புக்கள்**

பிள்ளைகளிலுள்ள சிகிச்சை செய்யப்படாத இரத்தச் சோகை அவர்களின் வளர்ச்சியில் ஒரு கடுமையான பாதிப்பைக் கொண்டு வரலாம். இரத்தச்சோகை மூளை விருத்தியடைவது மற்றும் செயற்படுவதைப் பாதிக்கலாம். பெரும்பாலும் இது கூர்ந்து கவனிப்பதில் பிரச்சினைகள், வாசிக்கும் திறனில் தாமதம் மற்றும் மோசமான பள்ளிக்கூடச் செயற்றிறன்கள் என்பவற்றை விளைவிக்கும்.

**இரத்தச்சோகையைக் குறித்து உங்கள் பிள்ளையின் மருத்துவர் என்ன செய்யலாம்?**

உங்கள் பிள்ளையின் இரத்தத்திலுள்ள ஈமோக்குளோபின் அளவைத் தெரிவிக்கும் ஓர் எளிமையான இரத்தப் பரிசோதனையை உங்கள் மருத்துவர் செய்வார். இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை, அளவு மற்றும் வடிவம் என்பன இரத்தச் சோகையின் வகையைக் காண்பிக்கும். ஒரு சில இரத்தத் துளிகளினால் ஈமோக்குளோபினின் அளவை விரைவாக அளந்து விடலாம்.

உங்கள் பிள்ளையின் மருத்துவர் ஓர் உடற் பரிசோதனையையும் செய்வார். உங்கள் பிள்ளையின் சக்தியின் அளவுகள், பொதுவான உடல்நலம், உணவுகள் மற்றும் குடும்ப வரலாறு என்பவற்றைப் பற்றியும் கேட்பார்.

**இரத்தச்சோகைக்கான சிகிச்சைகள்**

சிகிச்சை உங்கள் பிள்ளையின் இரத்தச் சோகை எவ்வளவு கடுமையானது மற்றும் அதற்குக் காரணம் என்ன என்பவற்றைச் சார்ந்திருக்கிறது. பொதுவான சிகிச்சைகள் பின்வருவனவற்றை உட்படுத்தும்.

இரும்புச்சத்து கொடுக்கக் கூடிய மருந்துகள், குழந்தைகளின் இரும்புச்சத்து நிறைந்த போர்மூலா, பாலைக் குறைத்து இரும்புச்சத்தைக் கூட்டுதல் போன்ற உணவு முறையில் மாற்றங்கள். இறைச்சி மற்றும் பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள் போன்றவை இரும்புச்சத்து நிறைந்த உணவுகளுக்குள் உட்படுகின்றன. இறைச்சி சாப்பிடாத பிள்ளைகள் பச்சைக் காய்கறிகள், கீரை வகைகளை அதிகமாக உண்ண வேண்டும். போலிக் அசிட் மற்றும் விற்றமின் B12 மருந்துகள். குடற்புழுத் தொற்று ஏற்படுமாயின் அதற்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் பாதணிகள் அணிவது, உணவு சமைக்க, அருந்த முன்னரும் மலசலம் கழித்த பின்னரும் கைகளை நன்றாகச் சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும். கடுமையான நோயொன்றினால் உண்டாகும் இரத்தச்சோகைகளுக்கு விசேடமான சிகிச்சை முறைகள் வைத்திய சாலையில் வழங்கப்படும்.

**மருத்துவ உதவியை எப்போது நாட வேண்டும்?**

பின்வரும் நிலைமைகளில் உங்கள் பிள்ளையின் வழக்கமான மருத்துவரை அழைக்கவும். உங்கள் பிள்ளை வெளிறிக் களைப்படைந்து மற்றும் விரைவாகச் சுவாசிக்கின்றான் என்றால், உங்கள் பிள்ளைக்கு இரத்தச்சோகை இருக்கலாம் என நீங்கள் சந்தேகிக்கிறீர்கள்.

**முக்கிய குறிப்புகள்**

மிகவும் பொதுவாக இரத்தத்தில் போதியளவு இரும்புச்சத்து இல்லாதிருப்பதால் இரத்தச்சோகை ஏற்படுகிறது. உங்கள் பிள்ளை அடிக்கடி களைப்படைந்து பலவீனமாக மற்றும் வெளிறி இருந்தால் இரத்தச் சோகைக்கான உங்கள் மருத்துவரைச் சந்திக்கவும். உங்கள் குழந்தைகளுக்கு 6 மாதம் முடிவடைந்த பின்னர் இரும்புச்சத்து நிறைந்த திட உணவுகள் வழங்க வேண்டும். இறைச்சி மற்றும் பச்சைக் காய்கறிகள் உட்பட இரும்புச்சத்து நிறைந்த உணவுகளைப் பிள்ளைக்குக் கொடுக்கவும். தனிநபர் சுகாதார முறைகளைச் சரிவரப் பின்பற்றவும்.

இரும்புச்சத்தின் அவசியம் இரும்பு என்றால் வலிமை. பூமியில் அபரிமிதமாகக் கிடைக்கும் தாதுப்பொருள்களில் முக்கியமானது. பல்வேறு சாதனங்கள் செய்யப் பயன்படும். இரும்பில்லாமல் இயந்திரங்கள் இல்லை . உடலுக்குத் தேவையான தாதுப்பொருள்களில் இரும்பும் ஒன்று. நமது இரத்தத்தில் ஈமோக்குளோபின் என்ற பொருள் இரும்பாலானது. இரும்புச்சத்து இல்லாவிட்டால் கலங்களால் ஒட்சிசனைப் பெற்றுக் கொள்ள முடியாது. இரும்புச்சத்தின் தினசரித் தேவை 1-3 mg. ஆனால் உடலால் இரும்புச்சத்தை அகத்துறிஞ்சும் திறன் ஓரளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. தானியங்கள் மிகுந்த உண்வுகளில் இருந்து 2-5 வீதமான இரும்புச்சத்தைத் தான் உடல் அகத்துறிஞ்ச இயலும். குறைந்த அளவு தானியங்கள், அதிகளவு இறைச்சி மற்றும் மீன் செறிந்த உணவுக்ளிலிருந்து உடல் 10-20 வீதமான இரும்புச்சத்தை அகத்துறிஞ்சிக் கொள்ளும். இதனால் உணவில் தினசரி தேவையை விட 10-25 மடங்கு அதிகமாயிருக்க வேண்டும்.

**இரும்புச்சத்துள்ள உணவுகள்**

இரும்புச்சத்து நிறைந்த உணவு வகளை இருவகையாகப் பிரிக்கலாம்

1. சைவ உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச்சத்து.

2. அசைவ உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச்சத்து.

அசைவ உணவு இரும்புச்சத்து சராசரி உணவில் 85 வீதம் கிடைக்கின்றது. ஆனால் இந்த 85 வீதத்தில் 20 வீதம்தான் உடலால் அகத்துறிஞ்ச முடியும். இந்த அகத்துறிஞ்சலை அதிகரிக்க உணவுடன் விற்றமின் C மற்றும் அசைவ உணவுப் புரதம் சேர்த்துக்கொள்ள வேண்டும். அசைவ உணவு இரும்புச்சத்து, சைவ உணவு இரும்புச்சத்தை விட நன்றாக உடலால் அகத்துறிஞ்சப்படுகிறது.

**இரும்புச்சத்து நிறைந்த அசைவ உணவுகள்**

முட்டை, இறைச்சி, ஈரல்.

**இரும்புச் சத்து நிறைந்த சைவ உணவுகள்**

வெந்தயக்கீரை, முல்லை, முசுட்டை, பொன்னாங்காணி வல்லாரை, முருங்கை , அகத்தி, முளைக்கீரை, தவசி முருங்கை, சண்டி, கறிவேப்பிலை, பசளி தூதுவளை, பருப்பு வகைகள், சோயாபீன்ஸ், பேரீச்சம்பழம், இதர உல்ர்ந்த பழங்கள் முதலியன.

தினமும் 50g கீரையைச் சேர்த்துக் கொண்டால் நமது தினசரி இரும்புத் தேவை பூர்த்தியாகும். அத்துடன் விற்றமின் C,B கரோட்டின், கல்சியமும் கிடைக்கும்.

மருத்துவர்,
ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிமயிலிட்டி திருவருள்மிகு ஸ்ரீ பூதநாயகி சமேத காசிபூதவராயர் தேவஸ்தான சோபகிருது வருஷ கொடியேற்ற மஹோற்சவ சிறப்பு மலர்-2023

### மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி



சகல வளங்களுடன் கல்வியும் செல்வமும் சீர்பெறு சைவமும் தமிழும் தழைத் தோங்கும் ஆதிமயிலிட்டி எனும் அழகான பதியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீபூதநாயகி சமேத காசி பூதவராயர் சுவாமிக்கு 200 ஆண்டுகளின் பின்னர் முதன்முறையாக திவ்ய மஹோற்சவம் நடைபெறத் திருவருள் கைகூடி யுள்ளது. ஸ்ரீ பூதவராயர் சுவாமியின் திருவருட்சக்தியும் அடியவர்களின் அளப்பெரும் சேவையும் தான் காரண மாகும். இந்த மஹோற்சவத்தை நடாத்தி வைக்கும் பெரும் பாக்கியம் கிடைத்தது எம் பெருமானின் திருவருள் தான். இந்த மஹோற்சவத்தின் பலனாக நாடுவளமுட னும் மக்கள் நலமுடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வேண்டி ஆசி கூறி அமைகின்றேன்.

சர்வே ஜனகா சுகினோ பவந்து.
மஹோற்சவ பிரதமகுரு
கிரியா திலகம்
சிவஸ்ரீ சரவணபவ. சந்திரகுமாரக் குருக்கள்.

### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி




ஆதிமயிலிட்டி பூதநாயகி சமேத காசிபூத வராயர் தேவஸ்தானத்தின் பெருந்திருவிழா நடைபெறுவது அறிந்து ஆனந்த மடை கின்றேன். போரில் முற்றாக அழிந்த இவ்வாலயத்தை அடியவர்கள் சிறப்பாக புணருத்தாரணம் செய்து நன்முறையில் கும்பாபிஷேகத்தை நடாத்தினர்.

ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்று தற்போது மஹோற்சவம் நடைபெறவிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். ஆலய பரிபாலன சபையின் அயராத முயற்சியாலும் அடியார்களின் பூரண ஒத்துழைப்பாலும் முதல் முதலாக கொடிஸ்தம்பம் ஸ்தாபிக்கப்பட்டு பெரு ந்திருவிழா ஆரம்பமாகின்றது. ஆதி மயிலிட்டியின் சைவப் பாரம்பரியத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இத்தகைய முயற்சிகள் அத்தியாவசியமாகும். ஆலயத்தின் வரலாற்று விழா சிறக்க சிறியேனது இதயபூர்வமான நல்லாசி களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தமைகின்றேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

### வாழ்த்துச் செய்தி




சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழத்திரு நாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் செம்மண் வளங்கொண்ட விவசாய நிலப் பரப்பும் அருகே வடக்குப் பக்கமாக கடல் வளமும் கிழக்கே விமான நிலையமும் அமையப் பெற்ற ஆதி மயிலிட்டி எனும் நாமம் கொண்ட கிராமத்தின் 200 ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்று அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ பூதநாயகி சமேத காசி பூதவராய ஆலயம் இராணுவ நடவடிக்கை காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து பின்பு மீளக் குடியமர்வுக்குப் பின் 2018 ஆம் ஆண்டு சேதமாக்கப்பட்ட நிலையின் மடாலயமாக இருந்த ஆலயத்தை மஹோற்சவம் செய்யக் கூடிய வகையில் சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய ஆலயமாக புதிதாக நிர்மாணம் செய்து. சென்ற 2022 ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக நடை பெற்றதன் பின்பு இவ்வளவு காலமும் அலங்கார உற்சவ மாக நடைபெற்று வந்த திருவிழாவே மஹோற்சவத் திருவிழாவாக முதன் முதலில் செய்வதற்கு இறையருள் கூடியுள்ள வேளையில் இன்றைய கொடியேற்றத் திரு விழாவை உபயமாகச் செய்ய முன் வந்துள்ள அடியவர் தாமாகவே கொடித் தம்பம் புதிதாக நிலைநாட்டுவதற்குரிய செலவுகள் அனைத்தையும் பொறுப்பேற்று அதனை நிறைவேற்றித் தந்துள்ள நிலையில் இன்று கொடியேற்ற வைபவம் சிறப்பாக நடைபெறுவதற்கு திருவருள் பாலித்திருக்கிறது.

அத்துடன் மஹோற்சவ ஏனைய உபயகாரர்கள் யாவரும் தமது திருவிழா உபயங்களைச் செய்வதற்கு முன் வந்துள்ளதையிட்டு மகிழ்வு அடைவதோடு எம்பெ ருமானின் திருவருள் அடியவர்கள் யாவர்க்கும் கிடைக்கப் பெற வேண்டிநிற்கின்றேன்.

அத்தோடு இன்றைய கொடியேற்ற வைபவம் சிறப்புற நடைபெறுவதற்கும் இவ் வருடமே கொடியேற்ற வைபவ த்துடன் கூடிய மஹோற்சவத் திருவிழாவை நடாத்த வேண்டும் என்று ஆவலுடன் செயற்பட்டு அதனை ஏனைய அடியவர்களின் உதவியுடன் நிறை வேற்றி வைப்பதில் பெரும்பங்கு கொண்டு அயராது உழைத்த எமது ஆலய பொருளாளர்அவர்களுக்கு என்றும் ஸ்ரீ பூதநாயகி சமேத காசி பூதவராயரின் திருவருள் கிடைக்கப்பெறும். எமது ஆலய மஹோற்சவத்தை சிறந்த முறையில் பக்தி பூர்வமாக இன்றைய கொடியேற்ற வைபவ நிகழ்வை நடாத்த சமுகமளித்து இருக்கும் குருமார்கள் மற்றும் அந்தணப் பெருமக்களின் ஆசிகள் எம க்குக் கிடைக்கப் பெறுவதோடு எம்பெருமானின் திருவருள் சகல ஜீவராசிகளுக்கும் கிடைக்கப் பெற வேண்டுகிறேன்.

செயலாளர். இ.கிருஷ்ணமூர்த்தி.



### ஆதிமயிலிட்டி காசி பூதவராயர் ஆலய வரலாறு

இலங்கையின் வடபால் வலிகாமம் பிரதேசத்தின் வடக்குப் புறமாக இந்து சமுத்திரத்தின் அலைகள் ஆர்ப்பரிக்கும் கரையை எல்லையாகக் கொண்ட ஊர் மயிலிட்டி ஆகும்.இந்த ஊரின் பூர்வீக கிராமமாக ஆதி மயிலிட்டி விளங்குகிறது.இவ்வூரில் கற்றறிந்த பெரியோர்களையும் ஏராண்டு வேளாண்மையில் சிறந்து விளங்கும் மக்களையும் பயிர்கள் செழித்து வளரும் கழனிகளையும் கொண்டமைந்த இந்த ஊரின் நடு நாயகமாக பூதநாயகி சமேத காசிபூதவராயப் பெருமான் எழுந்தருளி யிருக்கிறார்.

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வாழ்ந்த மூதாட்டி ஒருவர் தனது இல்லத்தில் பூதவராயப் பெருமானின் திருவுருவை அமைத்து வழிபாடாற்றி வந்துள்ளார் என்றும் அவரது மறைவை அடுத்து அந்த இல்லம் ஊரவர்களால் ஒரு மடாலயமாக மாற்றப்பட்டு வழிபாடாற்றப்பட்டது என்று முன்னோர்கள் கூறுவர்.

இந்த ஆலயம் 1926 ஆம் ஆண்டு புனரமைப்பு செய்யப்பட்டு ஐம்பொன்னாலான பூதநாயகி சமேகாசி பூதவராயர் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அன்றிலிருந்து செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பூஜைகளும் பொங்கலும் நடைபெற்று வந்தன.

காசி பூதவராயர் ஆவணி மாத ரேவதி நட்சத்திரத்தில் அவதரித்தார் என்பது இவ்வூர் மக்களின் நம்பிக்கை.அதனை ஆரம்ப நாளாகக் கொண்டு அலங்கார உற்சவம் ஆரம்பமாகும்.ஆரம்பத்தில் 10 தினங்கள் நடைபெற்ற திருவிழா காலப்போக்கில் 25 தினங்களாக நடை பெற்றது.இறுதி நாள் சங்காபிஷேகமும் திருவூஞ்சலும் நடைபெற்று விசேட வீதியுலா இடம்பெறும்.இவ்வாலயம் 1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக் முற்றாக சிதைவுற்றிருந்தது.

2018 இல் மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்து ஆலயத்தை மீளக் கட்டி அமைக்க திட சங்கற்பம் பூண்டனர். அந்த வகையில் ஆதி மயிலிட்டி வாழ் உள்ளூர் புலம்பெயர் மக்களுடைய பாரிய நிதியுதவியு டன் இவ்வாலயம் ஆகம விதிகளுக்கு அமைய பல சுற்றுப் பரிவார மூர்த்திகளைக் கொண்ட பெரும் திருக்கோயிலாகக் கட்டப்பட்டு 23.01.2022 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.இவ் ஆலயம் இவ்வாண்டு (2023) பஞ்சகிருத்திய தொழிலை உணர்த்தும் கொடியேற்றத்துடன் கூடிய 18 நாள் மஹோற்சவம் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது.

சுபம்.

### வாழ்த்துச் செய்தி



எம்பெருமானின் கொடியேற்ற வைபவம் சிறப்புற நடைபெறுவதற்கு திருவிழா உபயகாரர்களின் ஆதரவும் அடியவர்களின் ஆதரவும் மிகவும் அளப்பெரியது என்றே சொல்ல வேண்டும்.இவ்வளவு காலமும் அலங்கார உற்சவமாக நடைபெற்று வந்த திருவிழாவே மஹோற் சவத் திருவிழாவாக மாற்றி செய்ய முற்பட்ட போது பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தும் எம்பெருமானின் திருவருளால் எல்லாம் இனிதாகவே இலகுவாகச் செய்யக் கூடிய அளவில் திருவருள் கிடைக்கப் பெற்றது.எமது ஆலய ரவிச்சந்திர சர்மா ஐயாவின் ஆலோசனையும் வழிகாட்டலும் எமக்கு நிறையவே கிடைக்கப் பெற்றதன் பயனாக யாவற்றையும் எளிதாகச் செய்யக் கூடியதாக இருந்தது. இவ் வருடமே மஹோற்சவத்திருவிழாவை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆவலுடன் செயற்பட்டு வந்த வேளையில் திருவிழா உபயகாரர்கள் மற்றும் கொடித் தம்பம் நாட்டும் வைபவம் அதற்கான செலவு யாவற்றையும் மனம் உவந்து செய்ய முன் வந்த கொடியேற்ற வைபவ திருவிழா உபயகார குடும்பங்கள் யாவர்க்கும் என்றென்றும் ஸ்ரீ பூதநாயகி சமேத காசி பூதவராயரின் திருவருள் கிடைக்கப் பெற வேண்டுகிறேன்.

இன்றைய கொடியேற்ற வைபவம் ஆதி மயிலிட்டி எனும் பெயர் கொண்ட எமது கிராமத்தில் அமையப் பெற்ற ஆலயத்தில் முதல் முதலில் நடைபெறுவதையிட்டு மகிழ்வு அடைவதோடு எம்பெருமா னின் திருவருள் என்றென்றும் யாவர்க்கும் கிடைக்கப் பெற வேண்டு கிறேன். கொடியேற்ற வைபவத்துடன் 18 நாட்கள் இரவு பகலாக நடை பெறும் திருவிழாவில் சகல பக்த அடியவர்களும் கலந்து கொண்டு எம் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டு கிறேன்.இறைவனின் ஐந்தொழில்களையும் குறிக்கும் இவ் மஹோற் சவத்தின் ஆரம்ப நாளாகிய கொடியேற்ற வைபவம் ஆரம்பமாகி 18 நாட்கள் நடைபெறும் பூஜை வழிபாடுகளில் அனைவரையும் கலந்து கொண்டு எம் பெருமானின் திருவருளைப் பெற வேண்டுகிறேன்.

பொருளாளர். இ.பாலகிருஷ்ணன்.

### ஆலயப் பிரதம குருவின் ஆசிச்செய்தி



காசிபூதவராயர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இம்முறை முதல் முதலாக (2023) நடைபெற திரு வருள் கைகூடி உள்ளது. இவ்வாலயம் கடந்த 28 ஆண்டுகளுக்கு மேல் அழிக்கப்பட்ட நிலையில் இராணுவத்தின் பிடியில் சிக்கி இருந்தது. ஆலய பூசகர் மறைந்த சோமசுந்தர்சர்மா அவர்களின் முயற்சியால் ஊர்மக்களின் உதவியால் சுன்னாகம் பூதவராயர் ஆலயத்தில் வைத்து நித்திய பூசைகள் தடையின்றி நடைபெற்றன. மீண்டும் இவ் ஆலயம் மைலை வாழ் மக்களின் பெரும் பங்களிப்பால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 23.01.2022 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அழகிய தோற்றத்துடன் காட்சிதரும் இவ் ஆலயத்தில் முதல்முறையாக மஹோற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

மும்மலங்களையும் ஐந்தொழில்களையும் குறிக்கும் இவ் மஹோற்சவமானது 03.09.2023 ரேவதி நட் சத்திரத்தில் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 18 தினங்கள் நடைபெற்று 20.09.2023 புதன்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.இப்புண்ணிய காலங்களில் அடியவர்கள். உபயகாரர்கள்.ஊர்வாழ் மக்கள் அனைவரும் சரிகை தொண்டுகள் செய்து அனைவரும் அருள்பெற்று வாழ ஆசிகூறி அமைகின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஆலய ஸ்தானிக குரு
பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரசர்மா

### பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துரை



ஆன்மாக்கள் உய்தி பெறுதல் பொருட்டு பெருங்கருணா மூர்த்தியான பரம்பொருள் உருவத்திருமேனி தாங்கி ஆலயங்கள் தோறும் எழுந்தருளி இருந்து அருள் பாலிக்கின்றது.

அந்த வகையில் நீர் வளமும் .செம்மண் வளமும் கொண்ட விவசாய நிலப்பரப்புடைய ஆதி மயிலிட்டியில் 200 ஆண்டு பழைமை வாய்ந்த திருக்கோயிலில் பூத நாயகி சமேத காசிப் பூதவராயராக எம் பெருமான் எழுந் தருளியிருந்து அருள் பாலிக்கின்றார்.

இவ் ஆலயம் 1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக முற்றாக சிதைவுற்றிருந்தது. 2018 இல் மக்கள் மீளக் குடியமர்ந்ததைத் தொடர்ந்து ஆலயத்தை மீளக் கட்டியமைக்க திட சங்கற்பம் பூண்ட னர்.அந்த வகையில் ஆதி மயிலிட்டி வாழ் உள்ளூர் புலம் பெயர் மக்களுடைய பாரிய நிதி உதவியுடன் இவ் ஆலயம் புதிதாக கட்டப்பட்டு 23.01.2022 அன்று மகா கும்பாபி ஷேக பெரு விழாவைக் கண்டு அதைத் தொடர்ந்து 25 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றது. இந்த ஆண்டு (2023) பஞ்ச கிருத்திய தொழிலை உணர்த்தும் கொடியேற்றத்தூடன் கூடிய 18 நாள் மகோற்சவம் நடைபெற இறையருள் கைகூடி உள்ளது.

எமது ஆலயத்தில் கொடியேற்றத்துடன் கூடிய மகோற்சவம் நடைபெற வேண்டும் என அயராது உழைத்த எமது பரிபாலன சபை பொருளாளரை இத் தருணம் வாழ்த்த கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட கொடித் தம்பத்தை நிறுவிய உபயகாரரையும் ஏனைய விழா உபய காரர்களையும் நன்றியுடன் வாழ்த்தி அமைகின்றோம். எல்லாம் வல்ல பூதநாயகி சமேத காசிப் பூதவராயர் திருவருள் ஆதிமயிலிட்டி வாழ் சைவப் பெருமக்களுக்கு கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து அமைகின்றேன்.

திரு.இரா.கேதீசன்,தலைவர்.ஆலய பரிபாலன சபை.

### கொடியேற்ற உபயகாரரின் வாழ்த்துச் செய்தி



சைவ சமய மக்களின் இறை நம்பிக்கை யில் குல தெய்வ வழிபாடு முக்கிய இடம் வகிக்கிறது. ஏனைய வழிபாட்டைக் காட்டி லும் குல தெய்வ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள்.காசி பூதவராயர் வழிபாடும் அவ்வண்ணமே ஆகும்.

இவ்வூர் மக்கள் பூதவராயரில் மிகுந்த பக்தி கொண்டவர்கள்.தங்கள் வீடுகளிலும் தொழில் ஸ்தாபன ங்களிலும் புதிய முயற்சிகள் ஆரம்பிக்க முன்னரும் விவ சாயிகள் தமது வயல் நிலங்களில் பயிரிடுவதற்கு முன்னரும் ஆலயத்திற்கு வந்து கற்பூரம் கொளுத்தி. தேங்காய் உடைத்து வழிபட்ட பின்னரே கருமங்களை ஆரம்பிப்பது வழக்கமாகும்.

இவ் ஆலயம் இவ் ஆண்டு தொடக்கம் கொடியே ற்றத்துடன் கூடி மஹோற்சவத்தை ஆரம்பிப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.இவ்வாலயத்தின் கொடியேற்ற உபயகாரனாக வாய்ப்புக் கிடைத்தது காசி பூதவராயரின் திருவருளே ஆகும்.அந்த வகையில் இவ் விழா சிறக்க எல்லாம் வல்ல காசி பூதவராயரின் திருவருளை வேண்டி அமைகின்றேன்.


சின்னையா குடும்பம்(கொடியேற்ற உபயகாரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமாக விண்ணில் சீறிப் பாய்ந்தது ஆதித்யா

(டில்லி)

**சூரியனை ஆய்வு செய்வதற்கான ஆதித்யா-எல்1 விண்கலத்தை இந்தியா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.**



ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து குறித்த ரொக்கெட் 11:50 மணி அளவில் விண்ணில் செலுத்தப்பட்டது. பூமியில் இருந்து 1.5 மில்லியன் கி.மீ தொலைவில் உள்ள இலக்கை அடைய 109 நாட்கள் ஆகும்.

ஆதித்யா-எல்1 விண்கலத்தில் சூரிய செயற்பாட்டின் நீண்டதூர ஆய்வுகளை மேற்கொள்ளும் அறிவியல் கருவிகள் உள்ளன. இதன் பணி 6 மாதங்கள் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திரனின் தென்துருவப் பகுதியில் விண்கலத்தை தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் கடந்த வாரம் வெற்றிகரமாகப் பெற்றுள்ளது.

ஆழமான விண்வெளியை ஆராயும் மற்ற நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவை இந்தியா வேகமாகப் பிடிக்கிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 1975 முதல் கிட்டத்தட்ட 100 ரொக்கெட்டுகளை ஏவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# நாட்டில் பல இடங்களில் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதேவேளை, இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகள், மேற்கு, வடமேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (4)

# கோர விபத்தில் தந்தை, மகள் பலி

(கொழும்பு)

வாரியபொலவில் இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகளும் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று பதிவாகி உள்ளது.

மோட்டார் சைக்கிளும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் பின்னால் பயணித்தவரும் படுகாயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றியனுப்பப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் 45 வயது தந்தையும் 16 வயது மகளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்தின் பின்னர் லொறியின் சாரதி தப்பிச் சென்றுள்ளதுடன் அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (4)

# முழுக் கடனும் செலுத்தும் வரை இங்கைக்கு சிக்கல்தான்!

## அமைச்சர் பந்துல

(கொழும்பு)

இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எதிர்வரும் 2048 ஆம் ஆண்டு வரை கடனை செலுத்துவது தொடர்பான நெருக்கடியில் இருந்து மீள முடியாது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு கடனை திரும்ப செலுத்துவதை மறுசீரமைக்கும் வரை மாத்திரமே கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருக்கும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



வெளிநாட்டு கடனை மறுசீரமைக்கும் வரை நாட்டுக்கு எவ்வித வெளிநாட்டு கடன் உதவியையும் பெற முடியாது.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் அபிவிருத்தித்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மீண்டும் கடன் உதவியை பெற்றுக் கொள்ள முடிந்தால் மாத்திரமே வீதிகள் உட்பட அனைத்து அபிவிருத்தி பணிகளையும் மீண்டும் ஆரம்பிக்க முடியும். இதற்கு எவ்வித அரசியல் தீர்வுகளும் இல்லை.

நாடு என்ற வகையில் நாம் செலுத்த வேண்டிய 36 பில்லியன் அமெரிக்க டொலர்களை எதிர்வரும் 2048 ஆம் ஆண்டு வரை செலுத்தியாக வேண்டும்.

இதனால், எந்த தலைவரின் கீழ் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் கடன் நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

தற்போது நடைபெறும் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல ஆசிய அபிவிருத்தி வங்கி 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது என்றார். (4)

# துப்பாக்கிச் சூட்டு சம்பவம் சந்தேக நபர் கைது

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான பத்தரமுல்லையில் வட்டிக்கு பணம் கொடுத்த நபரை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக அதுருகிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

22 வயதான குறித்த சந்தேக நபர் அதுருகிரிய பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் இலங்கையிலிருந்து சிங்கப்பூர் நோக்கி பயணிப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை விமான நிலைய அதிகாரிகள் உடனடியாக சிங்கப்பூர் விமான நிலைய அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சந்தேக நபர்களை திருப்பி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். (4)

# செப்.7 இல் இந்தியா வருகிறார் பைடன்

(வோஷிங்டன்)

ஜி-20 நாடுகள் அமைப்பின் உச்சி மாநாடு எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் இந்திய தலைநகர் டில்லியில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்து வருகிறது.

இந்த நிலையில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்வரும் 7 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஜி-20 மாநாட்டுக்கு முன்பாக 8 ஆம் திகதி ஜோ பைடன் இந்திய பிரதமர் மோடியுடன் இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்துவார் என்றும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது, ஜி-20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ஜோ பைடன் 7 ஆம் திகதி இந்தியாவுக்கு வருகிறார்.

8 ஆம் திகதி இந்திய பிரதமர் மோடியுடன் இரு தரப்பு சந்திப்பில் பங்கேற்பார். 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்கிறார்.

அதில் ஜனாதிபதி ஜோ பைடன், மற்ற உறுப்பு நாட்டு தலைவர்கள், தூய்மையான எரிசக்தி மாற்றம், கால நிலைமாற்றத்தை எதிர்த்து போராடுவது உள்ளிட்ட உலகளாவிய பிரச்சினைகளை சமாளிப்பதற்காக கூட்டு முயற்சிகள் குறித்து விவாதிப்பார்கள் என்று தெரிவித்து உள்ளது.



ஜோ பைடன்-மோடியின் இரு தரப்பு பேச்சுவார்த்தையில் இரு நாட்டு வர்த்தகம், பாதுகாப்பு, பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறான். ~ *நார்மன் வின்சென்ட் பீல்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கப்பூர் ஜனாதிபதியாக எங்கள் ஈழத் தமிழன்

சிங்கப்பூர் நாட்டின் ஜனாதிபதியாக எங்கள் ஈழத் தமிழர் தர்மன் சண்முகரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தியறிந்தபோது, எம் தோள்புயங்கள் உயர்ந்தன. இதயங்கள் உவகையால் நெகிழ்ந்தன.

எங்கள் யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட தாய் தந்தையருக்கு மகனாகப் பிறந்த தர்மன் சண்முகரட்ணம் சிங்கப்பூர் ஜனாதிபதியாக வெற்றி பெற்றார் என்பதற்குள் ஈழத் தமிழர்களின் எதிர்காலம் பற்றிய எதிர்வுகூறல்கள் நிறையவே உண்டு.

ஆம், இலங்கைத் திருநாட்டின் ஆதிக்குடிகளும் ஆட்சிக் குடிகளுமான தமிழர்கள் இன்று இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஏன் சமகாலத்தில் சபாநாயகராகவோ வரமுடியாத நிலைமையுள்ளது.

அதுதான் என்றால் இல்லை. இந்த மண்ணில் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்குக்கூட, சிங்களப் பேரினவாதம் விடுவதாக இல்லை.

காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து தமிழின அழிப்பைச் செய்வதில் இந்த நாட்டின் பேரினவாத ஆட்சியாளர்களும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் தீவிரமாக உள்ளனர்.

இதனால் இந்த மண்ணில் வாழமுடியாதென்ற நிலையில் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த நம் தமிழ் உறவுகள், இன்று வெளிநாடுகளில் ஆட்சி அதிகாரத்திலும் பொருளாதார பலத்திலும் உயர்ந்த இடத்தில் உள்ளனர்.

அதிலும் குறிப்பாக பிரிட்டன், கனடா போன்ற நாடுகளில் பாராளுமன்ற உறுப்பினராக, மாநகரப் பிரதிநிதிகளாக நம்மவர்கள் பதவி வகிக்கின்றனர்.

அதேநேரம் ஐரோப்பிய நாடுகளில் ஆட்சி அமைப்பதற்கு ஈழத் தமிழர்களின் ஆதரவு அவசியம் என்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இது ஈழத் தமிழர்களின் அறிவாற்றலை, அவர்களின் கடின உழைப்பை, அவர்களின் ஆளுமைத்திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இப்போதுகூட அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாக இருந்தால், அதற்குப் புலம்பெயர் ஈழத் தமிழர்களின் பங்கும் பணியும் அவசியம் என்ற யதார்த்தத்தை சிங்கள ஆட்சியாளர்களும் சிங்களப் புத்திஜீவிகளும் உணர்ந்துள்ளனர்.

எனினும் இனவாதத் தீயைக் கக்குகின்ற பௌத்த பிக்குகளின் அறியாமையும் செருக்கும் சேர்ந்து நாட்டை மீட்க முடியாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

பரவாயில்லை. இறைவனால் படைக்கப்பட்ட இந்த உலகம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. காலத்துக்குக் காலம் நிலைமைகள் மாறும். மக்களின் சிந்தனைகள் மாறும். அறிவியலும் தொழில்நுட்பங்களும் அதீத வளர்ச்சியடையும்.

இந்த நிலைமாற்றமானது இயற்கையானது. அதனைத் தடுத்து நிறுத்துகின்ற தகைமை கடவுளைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது.

அந்த மாற்றத்தில் உலக நாடுகள் பலவற்றை ஈழத் தமிழர்கள் ஆட்சி செய்வர். அதன் அறிகுறி சிங்கப்பூரில் தெரிந்துள்ளது.

இனி இருந்து பாருங்கள் ஈழத் தமிழன் உலகம் முழுமையிலும் கோலோச்சுவான். இது சத்தியம்.

## அனுமதியற்ற மீன்பிடி எழுவர் அதிரடிக் கைது

அனுமதியற்ற மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 21-38 வயதிற்கு உட்பட்ட 07 பேரை கைது செய்துள்ளதுடன்2 டிங்கிபடகுகளையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - வெற்றிலைக்கேணி கடற்படைக்குட்பட்ட சுண்டிக்குளம் கடற்படையினர் இவர்களை கைது செய்துள்ளதாக கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கட்டைக்காடு முள்ளியானை சேர்ந்தவர்கள் என்றும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீரியல்வளத்திணைக்கள அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (ம-7,9)

## கோர விபத்து தாய், மகன் பலி

(ஜா-எல)

வாகன விபத்தொன்றில் 45 வயதுடைய தாயும் 15 வ்யது மகனும் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர்கள் கொள்கலன் லொறி ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்திசையில்வேன் ஒன்று வந்த நிலையில் வேகத்தை கட்டுப்படுத்த முயற்சித்த போது கொள்கலன் லொறியில்மோதிவிபத்துக்குள்ளாகியுள்ளனர்.

மினுவாங்கொடை ஜா-எல வீதியின் அம்பகஹவத்த பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தாய் மற்றும் மகன் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி இருவரும் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

45 வ்யதுடைய பெண்ணும் அவரது 15 வயது மகனும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்கள் மெடேமுல்ல மினுவாங்கொட பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9)

### அரகலய வேளையில்

## கடமை தவறிய பொலிஸ் அதிகாரி பணியிடை நீக்கம்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் புரட்சியை தொடர்ந்து, ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய பின்னர், எதிர்ப்பாளர்களை பியானோ இசைத்து மகிழ்வித்த அதிகாரிஒருவரை பணிநீக்கம் செய்துள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்தித்த எதிர்ப்பாளர்களால், ஜனாதிபதி மாளிகை கைப்பற்றப்பட்ட நாளில் பாதுகாப்பிற்காக கான்ஸ்டபிள் தயாரத்ன நியமிக்கப்பட்டார்.

இதன்போது ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் இருந்த பியானோவில் அமர்ந்து, அதன் அறைகள் வழியாக சென்றுகொண்டிருந்த மக்களுக்கு பாடலை இசைத்திருந்தார்.

ஜனாதிபதி மாளிகை கட்டிடத்தை சேதப்படுத்தும் போதும் குறித்த அதிகாரி பியானோ வாசித்துக் கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டிற்கிணங்க இடம்பெற்ற நீண்ட விசாரணைக்குப் பிறகு கான்ஸ்டபிள் ஒழுக்கத்தை மீறியதாக பொலிஸ் அதிகாரிகள் முடிவு செய்யததன் அடிப்படையிலேயே அவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு,வேலைகளுக்காக நாளை **திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** குருக்களூர்- மன்னார் வீதி, நீலியமோட்டை, பறயனாளங்குளம் குருக்களூர், பெரியதம்பனை, புளியடிமுறிப்பு, வலைத்தோட்டம், பெரியதம்பனை, மலையாபருத்திக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கீரிச் சம்பாவை அதிக விலைக்கு விற்றால் உடன் நடவடிக்கை

### நுகர்வோர் அதிகார சபை

அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்யும் விற்பனையாளர்களை கண்டுபிடிக்க நுகர்வோர் அதிகார சபையினால் நேற்று கொழும்பு கோட்டை பகுதியில் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அங்கு, கட்டுப்பாட்டு விலைக்கு மேல்கீரிச்சம்பா அரிசி விற்பனை செய்யப்படும் இடங்கள், கீரிச் சம்பா அரிசி கையிருப்பு மறைத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை அதிகாரசபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஓகஸ்ட் 02 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி கீரிச் சம்பாவிற்கு அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாக விதிக்கப்பட்டிருந்தது.

இதனால் நாடளாவிய ரீதியில் கடைகளில் கீரி சம்பா மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், சில வர்த்தகர்கள் கீரிச் சம்பாவை கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் விற்பனை செய்து வருவதாகவும், ஆகையால் தொடர்ச்சியாக சோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவ்வாறு விற்பனை செய்யும் இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அச்சபை மேலும் தெரிவித்தது. (ம-7,9)

## மின்சார வேலியில் சிக்குண்ட கொம்பன் யானை பலி

(புத்தளம்)

புத்தளம் ஆனமடுவ செம்புவெவ பகுதியில் கொம்பன் யானையொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இவ்வாறு யானை உயிரிழந்துள்ளதை அவதானித்த அப்பிரதேச மக்கள் புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்குத் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் சென்று உயிரிழந்த கொம்பன் யானையை பார்வையிட்டனர்.

இதன்போது கொம்பன் யானையின் தும்பிக்கை மின்சார வேலியில் சிக்குண்டு குறித்த கொம்பன் யானை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த கொம்பன் யானை 9 அடி உயரமெனவும் 40 வயது மதிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் தந்தம் 2 அரை அடி நீளம் கொண்டதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவினர் இதன்போது தெரிவித்தனர்.

உயிரிழந்த கொம்பன் யானைக்கு இன்று உடற்கூற்று பரிசோதனை முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் யானை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-7,9)

## அலங்கார உற்சவம்

(அராலி)

அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் பெருமான் தேவஸ்த்தான அலங்கார உற்சவமானது ஆவணி மூல நன்னாளான கடந்த 26.08.2023அன்று ஆரம்பமாகி பக்தி சிரத்தையுடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை 15 தின உற்சவங்களாக இடம் பெற்று வருகிறது.

இவ் உற்சவந்தனில் அடியார்கள் கலந்து கொண்டு வைரவப் பெருமானின் திருவருளை பெற்றிடுமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7,9)

### இணுவில்

## சிவகாமி அறநெறியின் 25 ஆவது ஆண்டு விழா

இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலையின் 25 ஆவது ஆண்டுநிறைவு விழாவானது இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து தர்மாசிரியர் இ.கிருஷ்ணராஜ்தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறையின் முது நிலை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் பிரதம விருந்தினராக சிறப்பிக்கவுள்ளார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண தென்னை முக்கோண வலய அங்குரார்ப்பண நிகழ்வு

(கிளிநொச்சி)

**வடக்கு தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதன் அங்குரார்ப்பண நிகழ்வும் சர்வதேச தென்னை விழாவும் தென்னை வளர்ப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மாதிரி தென்னை தோட்டம் பகுதியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் ராமேஸ் பத்திரன, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லொஹான் ரத்வத்த, பாராளுமன்ற உறுப்பினர் திலீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், தெங்கு அபிவிருத்தி சபை அதிகாரிகள், தென்னை உற்பத்தியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தென்னை செய்கையாளர்களுக்கு ஒரு ஏக்கர் தென்னை செய்கைக்கான தென்னங் கன்றுகளும் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

இதன் பொது அமைச்சர் ரமேஸ்பத்திரன தெரிவிக்கையில்,



இரண்டு வருடங்களில் 3.5 மில்லியன் தென்னைகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் மூலம் வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்தப்படும் என நம்புவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்னை செய்கையில் சிறப்பாக மேற்கொண்ட செய்கையாளர்களிற்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் சிறந்த தென்னைச் செய்கையாளர்களுக்கு ரூபா இரண்டு லட்சம் காசோலைகளும் வழங்கப்பட்டது. தொடர்ந்து குறித்த நாளில் நினைவாக தென்னங் கன்றும் நாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-104-316)

# சட்டவிரோத மணல் அகழ்வு இருவர் பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இரண்டு டிப்பர் வாகனங்கள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் சட்ட விரோதமான முறையில் இரண்டு டிப்பர்களில் மணல் ஏற்றி வருவதாக இராணுவத் தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த வாகனங்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டதுடன், டிப்பர் வாகன சாரதிகளும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தருமபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தருமபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

# தமிழ் அரசு கட்சியின் மன்னார் மாவட்ட கிளைக்கு புதிய நிர்வாகத் தெரிவு

(தருமபுரம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று கட்சியின் நிர்வாக செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் தலைமையில், கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச கிளைகளினதும் நிர்வாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, மன்னார் மாவட்ட கிளையின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், செயலாளராக சூசையப்பு துரம், பொருளாளராக முன்னாள் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் பரஞ்சோதி, துணைத் தலைவராக ஜெயக்குமார், துணைச் செயலாளராக திருமதி செல்வராணி சோசை ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை மாவட்ட கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (4-285)

# வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் இருந்து 11 வைத்திய நிபுணர்களும், 8 வைத்தியர்களும் வெளிநாடு சென்றுள்ளதாக வவுனியா மாவட்ட அரச வைத்திய சங்க கிளை செயலாளர் வைத்தியர் அரங்கன் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கடந்த வருடம் 6 ஆம் மாதத்தில் இருந்து இதுவரை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளார்கள். இதன்படி வைத்தியர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சென்றுள்ளார்கள். விசேட வைத்திய நிபுணர்கள் 272 பேர் சென்றுள்ளனர். பொருளாதார நெருக்கடி, வேலை செய்வதற்கான பொருத்தமான வளங்கள் இன்மை, இடவசதிகள் போதாமை போன்றனவே இதற்கு காரணம்.

தற்போது பிரதான வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளுக்கு ஆட் பற்றாக்குறை ஏற்படுகிறது. வைத்தியர்களுக்கான மருந்துகள், விடுதிகள், பாதுகாப்பு பிரச்சினை என்பன இதற்கு காரணங்களாகும். வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் ஒரு வைத்திய நிபுணர் கூட இல்லை.

வவுனியாவிற்கு அண்மையில் உள்ளவர்களும் வவுனியா வைத்தியசாலைக்கே வருகிறார்கள். ஆட்பற்றாக்குறை வவுனியா வைத்தியசாலையிலும் ஏற்படுமாக இருந்தால் நிலைமை மோசமாக அமையும்.

வவுனியா மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான காலப்பகுதி வரை வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து 11 வைத்திய நிபுணர்களும், 5 சாதாரண வைத்தியர்களும்வவுனியா மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து 3 சாதாரணவைத்தியர்களும்வெளிநாட்டிற்கு சென்றுள்ளனர்.

இந்த நிலை தொடருமாக இருந்தால் மக்களுக்கு பாதிப்பே. இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு எமது சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார். (4-250)



சுகாதார அமைச்சரை மாற்றுமாறு கோரி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கையெழுத்துப் போராட்டமானது ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட கிளையினால் வவுனியா செட்டிக்குளத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

(படம்: வசந்தரூபன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 550 | 600 |
| தக்காளி | 200 | 160 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 180 |
| கோவா | 250 | 250 | 200 | 250 |
| கரட் | 350 | 350 | 400 | 400 |
| பூசணி | 80 | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 180 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 300 |
| வெண்டைக்காய் | 100 | 120 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 150 | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 140 | 250 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 180 | 160 | 120 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 280 | 200 |
| போஞ்சி | 450 | 400 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 180 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 120 |
| தேசிக்காய் | 800 | 600 | 800 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 380 | 350 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 77 வகை...

பட்ட 378 வகையான மருந்துகள் இது வரை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த வருடம் உலக வங்கியின் உதவியுடன் 23 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 46.7 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,9)

# வட மாகாணம்...

இந்த வறண்ட காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை நாட்டில் 20 மாவட்டங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், வறண்ட காலநிலையினால் 60,000 ஏக்கருக்கும் அதிகமான நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை குறிப்பிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-7,9)

# 4 கிளைமோர்...

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுமலையில் 4 கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டு வளவைச் சுத்தம் செய்யும் போது, நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட கிளைமோர்கள் தொடர்பில் வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். பொலிஸார் அங்கிருந்து 4 கிளைமோர் குண்டுகளை மீட்டனர். (ம-7,9)

# பழக்கடை...

பாரியை கடத்திச் சென்றதாக உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடத்தப்பட்ட நபர், நபர் ஒருவரிடம் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணம் வாங்கியதாகவும், அதனை மீள செலுத்தாத நிலையில் இரு தரப்புக்கும் இடையில் பிரச்சினை நிலவி வந்த நிலையில், குறித்த நபர் கடத்தப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,9)

# சந்திரிகாவின்...

எதிர்க்கட்சிகளின் பலம் வாய்ந்த அரசியல் குழுவொன்று செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி ஒருவர் வெளிநாட்டில் விமுக்தியை சந்தித்து இது குறித்து தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இதற்கு சந்திரிகா குமாரதுங்கவின் ஆசியும் கிடைத்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

எவ்வாறாயினும், இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை விமுக்தி குமாரதுங்க தெரிவிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

# சிறுமியின் கை...

மாக யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரஸ்தாப சிறுமி அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக இச்சம்பவம் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ம-7,9)

# திருமலையில்...

உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலையில் தமிழர் குடியிருப்புக்களின் மத்தியில் அமைக்கப்படவுள்ள விகாரைக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தடைவிதித்ததை தொடர்ந்து, பிக்குகள் காட்டுத்தனமாக செயற்பட்டு, திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்திற்குள் புகுந்து கலாட்டா செய்திருந்தனர்.

விகாரை அமைக்க திட்டமிடப்பட்டுள்ள அரச காணிக்குள் பிக்குகள் நுழைய பிரதேச செயலாளர் தடைவிதித்திருந்தார். பிக்குகளின் கலாட்டாவை தொடர்ந்து, அந்த தடையுத்தரவு விலக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பெரியவெளி சந்தியில் இன்றைய தினம் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று நடக்கவுள்ள நிலையில், அதற்கு எதிராக விகாராதிபதி தரப்பினரும் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், இது இன முறுகலை ஏற்படுத்தும் என்றதன் அடிப்படையில் நிலாவெளி பொலிஸாரினால் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இரு தரப்பிலும் தலா 7 பேர் வீதம் 14 பேருக்கு தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட போராட்டத் தரப்பினர் 7 பேருக்கும், விகாராதிபதி உள்ளிட்ட 7 விகாரைக்கு ஆதரவானவர்களுக்கும் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

# இந்து - பௌத்த...

உள்ள தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் நட்புறவுடன் உள்ளனர்.

கொழும்பு முஸ்லிம் மக்களும் சிறப்பாக செயற்படுகின்றனர்.

சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்தால் ஒரு நாடு என்ற வகையில் நல்ல பயணத்தை மேற்கொள்ள முடியும்.

நான் இதைச் சொன்னால் அடிபடுவேன். ஆனால் இதைப் பற்றி நாம் பேச வேண்டும். நாட்டைப் பற்றி சிந்தித்து முடிவெடுக்கும்போது யாராவது எதிர்ப்பார்கள். ஈஸ்டர் தாக்குதல் குறித்து எந்த மதத் தலைவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

இது தீவிரவாதிகளின் செயல். தற்போது அரசாங்கம் வலுவாக செயற்படும் போது பௌத்த மற்றும் இந்து மதங்களுக்கு இடையில் நெருக்கடிகளை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

எனவே நாம் இந்த விடயத்தில் புத்திசாலித்தனமாக இருக்கவேண்டும். இதைப் பற்றி நாம் பேச வேண்டும்.

நாம் ஒரு நாட்டின் அடிப்படையில் உயரவேண்டுமானால், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதைச் செய்ய முயலும்போது, தீவிரவாதிகள் எங்களின் கால்களை இழுத்துச் செல்கின்றனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் தீவிரவாதிகள் தமது அரசியல் பிழைப்புக்காக நாட்டை முன்னோக்கி நகர்த்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கு செயற்படுகின்றனர் என்றார். (ம-7,9)

ஆசிய கிண்ணத் தொடர்

## இந்தியா - பாகிஸ்தான் போட்டி மழையால் இரத்து



# இலங்கையின்...

முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட இலங்கையின் தற்போதைய மீட்சிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். (ம-7)

## மெகா பவர்

திகதி 02/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1573
வெற்றி எழுத்து: W | சுப்பர் இலக்கம்: 03 | வெற்றி இலக்கங்கள்: 17 46 49 58
Double Chance 03843

## தன நிதானய

திகதி - 2023.09.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1255
H 04 46 55 60 H
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance இலக்கம் 27484

## லக்கி 7 (Lucky 7)

திகதி 02.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0051
L7 இலக்கம் 0 5
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 9 5 6 4 5 0

## கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3467
சீட்டிழுப்பு திகதி | 02.09.2023
ஆங்கில எழுத்து: J | வெற்றி இலக்கங்கள்: 22 44 49 61
விசேட வெற்றி எழுத்து: J
56825
தேசிய லொத்தர் சபை

## HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.02
சீட்டிழுப்பு இலக்கம் 534
வெற்றி இலக்கினம்: மீனம் | வெற்றி இலக்கங்கள்: 04 31 33 34 | விசேட இலக்கினம்: மீனம்
தேசிய லொத்தர் சபை

## மஹஜன சம்பத

திகதி 2023/09/02
சீட்டிழுப்பு இலக்கம் 5225
ஆங்கில எழுத்து: F | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 9 1 9 1 9 1
தேசிய லொத்தர் சபை

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2199 | வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.02 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 05 26 60 75 | ஆங்கில எழுத்து: N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,457,412.40
செகண்ட் சான்ஸ் விசேட இல. 71374 | 154

## சனிதா

திகதி 2023.09.02 | வெற்றி வாரம் 4360 | வர்ணம் இளம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: 01 02 10 71 | A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,170,504.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 86028 | ரூ.400/- பணப்பரிசு 979
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## ராசி

சீட்டிழுப்பு வாரம் 3911 | வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.02 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 15 26 49 55 | மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,448,136/-
செகண்ட் சான்ஸ் விசேட இல. 68726 | 474

## கப்ருக

திகதி 02.09.2023 | வெற்றி வாரம் 1375 | வர்ணம் சிவப்ப
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 11 06 13 26 32
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 435,191,594.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. 23996 | 763
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 625 | திகதி 2023-09-02 | வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து: J | வெற்றி இலக்கங்கள்: 02 32 36 | விதி எண்: 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,879,696.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## அத கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2025
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.09.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,543,008/-
வெற்றி இலக்கங்கள்: 17 31 38 41 | F
செகண்ட் சான்ஸ் விசேட இல. 33961 | 524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரில் கடை ஒன்றிற்கு

முழுநேர /பகுதிநேர வேலைக்கு 30 வயதுக்கு உட்பட்ட பெண்கள் தேவை.

சம்பளம் : 10,000 - 35,000 (16910)

077 046 0367
077 791 4221

## இராஜ மருத்துவம்

பேரறிஞர் Dr.K. பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்

மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள் தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை மன நோய், நோவு, விஷக்கடிக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள 076 274 4488

வல்லை வீதி, சங்கானை (C-7181)

## வேலைவாய்ப்பு ஹோட்டல் ஓவியா

HOTEL OVIYA

1. **தலைமைச் சமையலாளர் (Head Chef)**
   இந்திய மற்றும் சைனீஸ் உணவு வகைகள் தயாரிக்கக்கூடிய குறைந்தது 8 வருடங்கள் தலைமைச் சமையலாளராக முன் அனுபவமுள்ளவர் தேவை
2. **சமையலாளர் (Cook)**
   இந்திய மற்றும் சைனீஸ் உணவு வகைகள் தயாரிக்கக்கூடிய குறைந்தது 3 வருடங்கள் முன் அனுபவமுள்ள சமையலாளர்கள் தேவை
3. **களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)**
   உணவகக் களஞ்சிய காப்பாளராக வேலை செய்த அனுபவம் மற்றும் தகைமை உள்ளவர்கள் தேவை

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம், உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். (16920)

முகாமையாளர் (Manager) 077 366 0828

47, Mill Road, Vavuniya.
Email : hoteloviya@gmail.com

## இலகுவில் ஆங்கிலம்..!

www.edus.lk
EDUS Learning made lovable

# "ENGLISH 360"

தரம் 6 - 11 வரையான மாணவர்களுக்கான விஷேட சர்வதேச தரத்திலான வகுப்புக்கள்.

செப்டம்பர் முதல் ஆரம்பம்.
ZOOM மற்றும் VIDEOS மூலமான கல்வி..!

மாதாந்தம் ரூ.500 மட்டுமே.

காலத்தின் தேவைக்கு ஏற்ப விஷேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு வருட பூரண கற்கைநெறி...!

APPLY NOW



### முக்கிய அம்சங்கள்

- அடிப்படையிலிருந்து ஆரம்பம்.
- இலக்கு கற்றலுக்கான வழிமுறைகள்.
- அங்கீகாரம் பெற்ற பல விரிவுரையாளர்கள்.
- மாதாந்த மொழித்திறன் விருத்தி செயற்பாடுகள்.
- வெளிநாட்டவர்களினூடான பயிற்சிநெறி கற்றல்.
- இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணையலாம்.
- கற்கைநெறி முடிவில் சான்றிதழ்.
- மொழியினை இயல்பாக கற்றிட ஓர் அரிய சந்தர்ப்பம்.
- கற்கைநெறி முடிவில் ஆங்கிலம் சரளமாகுவது நிச்சயம்.

VOCABULARY, SPOKEN, GRAMMER, WRITTEN

**இணைய விரும்பும் மாணவர்கள்:**
பெயர், பாடசாலை, தரம், WhatsApp இலக்கம் குறிப்பிட்டு கீழுள்ள எமது வங்கியில் ரூ.500 வைப்பிலிட்டு பற்றுச்சீட்டுடன் 0777123330 இலக்கத்திற்கு அனுப்புங்கள். உடனடியாக பதிவு உறுதிசெய்யப்பட்டு வகுப்பில் இணைக்கப்படுவீர்கள்.

BOC - EDUS LANKA (PVT) LTD - 87979133 - KOKUVIL

www.edus.lk

மேலதிக விபரங்களுக்கு: 070 222 1012

(C-7184)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்.

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சுப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## WORK IN UK

WORK PERMITS
CONSTRUCTION WORKERS

- 5 YEAR WORK PERMITS
- BRICK LAYERS
- SHUTTERING CARPENTERS
- SHUTTERING JOINERS
- STEEL FIXERS
- ELECTRICIANS
- PLUMBERS
- STEEL ELECTORS FOR STRUCTURES

CIMS COLLEGE 0777-068-777



## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 249/= | (max2Kg) |
| 1 Kg கோதுமை மா | - 185/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 197/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 284/= | (Max 2Kg) |
| 1 Kg தீட்டல் | - 185/= | (Max 5Kg) |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~(175/=)~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 790/= | ~~(830/=)~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1300/= | ~~(1400/=)~~ |



1050/- ~~1080/-~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம். (16930)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
Happy Supermarket 0777 8080 30

## வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்

T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna. (16905)

## விற்பனைக்கு STREAM 49 CC

ஒரு கை பாவிப்பிலுள்ள 2 மாதத்திற்குள் Engine வேலை செய்யப்பட்டு புது ஸ்ராட் மோட்டர், புதுச் செயின், புது வீல், கால் பிறேக், பிளேட்டிங் காண்டில், சதுர ஹெட்லைட், நல்ல பற்றி, டயர்களுடன் செல்ப் ஸ்ராட் மொடல் மோட்டார் சைக்கிள் 2024ம் ஆண்டு வாகன அனுமதிப்பத்திரத்துடன் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. றலி (Raligh) சைக்கிளும் விற்பனைக்குண்டு (16908)

074 260 4160

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு ஆசிரியை/அரச திணைக்களத்தில் தொழில்புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது) (16901)

077 864 9878, 077 634 3103 (viber)

## கட்டட வேலைகள்

உங்கள் வீட்டினை தரமாகவும் விரைவாகவும் கட்டித்தரப்படும் (16881)

074 077 1490

## பணிப் பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள 05 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 40-55 வயதுடைய இரு பெண் வேலையாள்த் தேவை

- சமையல் வேலை
- இரு குழந்தைகளைப் பராமரிப்பதற்கு

சம்பளம் ஒருவருக்கு 45,000/-

077 937 0000
075 988 1000 (16926)

## வேலையாள் தேவை



நெல்லியடியில் இயங்கும் பலசரக்கு கடைக்கு பில் போடக்கூடிய அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.

மற்றும்

இக்கடைக்கு வேலையாள் தேவை (C-7185)

தொடர்பு
077 983 5705

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16878)

077 728 6061

## மணமகள்கள் தேவை

- இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991ல் பிறந்த துலாம் சித்திரை 4 ஆம் பாதம் வெளிநாட்டில் மெக்கானிக் தொழில்புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
- 1998ல் பிறந்த தனுசு மூலம் 4 ஆம் பாதம் வெளிநாட்டில் மெக்கானிக் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (16875)

075 768 7180, 070 243 2477

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org